வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959 Reg. No. : P. 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ඊළනාඩු

Email : news@eelanadu.lk மலர் : 04 19.08.2023 சனிக்கிழமை இதழ் : 252 பக்கங்கள் : 16




# தடைகளைத் தாண்டி குருந்தூரில் பொங்கல்

## விகாரையிலும் ஏட்டிக்குபோட்டி வழிபாடு

- குழப்புவதற்கு பிக்குகள் முயற்சி
- பொலிஸார் பலத்த பாதுகாப்பு





முல்லைத்தீவு, ஓகஸ்ட் 19

**குருந்தூர்மலை ஆதிசிவன் ஆலயத்தில் நேற்று பொங்கல் வழிபாடு நடைபெற்றது. நீதிமன்ற உத்தரவுக்கு அமைய பொலிஸ் மற்றும் விசேட அதிரடிப் படையினரின் பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் இந்த வழிபாடுகள் முன்னெடுக்கப்பட்டன.**

இதேநேரம், ஏட்டிக்குப் போட்டியாக குருந்தூர்மலை விகாரையிலும் பிக்குகளும் பெரும்பான்மையின மக்களும் வழிபாடுகளை நடத்தியிருந்தனர்.

இந்த நிகழ்வுகளின் போது இரண்டு பகுதியினருக்கும் இடையே பொலிஸாரும் விசேட அதிரடிப் படையினரும் இணைந்து இறுக்கமான பாதுகாப்பை ஏற்படுத்தியிருந்தனர்.

தொல்பொருளுக்கு பாதிப்பு ஏற்படாது பொங்கலை முன்னெடுக்க வேண்டும் என்று தொல்பொருள் திணைக்களம் விடுத்த கட்டளைக்கு அமைவாக ஆதிசிவன் ஐயனார் ஆலய நிர்வாகத்தினர் நிலத்தில் கல் வைத்து, அதன் மீது தகரம் வைத்து, அதற்கு மேல் கல் வைத்து

16

## யாழ். பல்கலை. துணைவேந்தராக மீளவும் சிறீசற்குணராஜா நியமனம்



யாழ்ப்பாணம், ஒக. 19

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக துணைவேந்தராக மீண்டும் சி. சிறீசற்குணராஜா நியமிக்கப்பட்டுள்ளார்.

1978ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க பல்கலைக்கழக சட்டத்துக்கு அமைவாக ஜனாதிபதிக்கு அளிக்கப்பட்ட அதிகாரத்தின்படி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் பேராசிரியர் சி. சிறிசற்குணராஜா யாழ்ப்பாண பல்கலைக்கழகத் துணைவேந்தராக தெரிவு செய்யப்பட்டுள்ளார் என்று ஜனாதிபதியின் செயலாளர் அறிவித்துளார்.

அவரின் புதிய பதவிக்காலம் எதிர்வரும் ஓகஸ்ட் 24ஆம் திகதி ஆரம்பமாகும். அடுத்து வரும் மூன்று ஆண்டுகளுக்கு அவர் துணைவேந்தர் பதவியில் நீடிப்பார்.

கணித புள்ளிவிபரவியல் துறையின் மூத்த பேராசிரியரான சிறீசற்குணராஜா கடந்த 2020ஆம் ஆண்டு முதல் யாழ். பல்கலைக்கழக துணைவேந்தராக செயல்பட்டு வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## பெண் உடையில் வந்து தாக்குதல்; 9 சந்தேகநபர்கள் நேற்றுக் கைது!

யாழ்ப்பாணம், ஒக. 19

பெண்களின் உடையில் வந்து கல்வியங்காட்டில் வீடு ஒன்றின்மீது தாக்குதல் நடத்திய சம்பவத்துடன் தொடர்புடையோர் என்ற சந்தேகத்தில் 9 பேர் நேற்றுக் கைது செய்யப்பட்டனர்.

யாழ்ப்பாணம் பிராந்திய மூத்த பொலிஸ் அத்தி யட்சகரின் கீழ் இயங்கும் பொலிஸ் பரிசோதகர் மேனன் தலைமையிலான மாவட்ட குற்றத்தடுப்பு பொலிஸ் பிரிவினரே இந்தக் கைதை முன்னெடுத்திருந்தனர்.

கடந்த செவ்வாய்க் கிழமை கல்வியங்காட்டில் இந்தத் தாக்குதலை நடத்திய குழுவினர் அண்மைக்காலத்தில் இவ்வாறான 5 தாக்குதல்களை

15

## குருந்தூர்மலையில் சிவனாலயம் சகலரும் சேர்ந்து முன்னெடுப்போம்!

### சிறீதரன் எம். பி. தெரிவிப்பு

முல்லைத்தீவு, ஒக. 19

முல்லைத்தீவு - தண்ணிமுறிப்பு, குருந்தூர்மலையில் பாரம்பரியமான, வரலாற்று புகழ்மிக்க சிவாலயம் கட்டுவதற்கான ஏற்பாடுகளை நாம் அனைவரும் இணைந்து முன்னெடுப்போம் என பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்தார்.

குருந்தூர்மலையில் நேற்று நடைபெற்ற பொங்கல் வழிபாட்டின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்



கண்டவாறு கூறினார்.

மேலும், மிகப்பெரிய அடாவடிகளுக்கும் நெருக்கடிகளுக்கும் மத்தியில்

15

## மூவாயிரம் மருத்துவர்களுக்கு பற்றாக்குறை நிலவுகின்றது!

### சுகாதார அமைச்சு அறிவிப்பு

கொழும்பு, ஒக. 19

நாட்டில் 3 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மருத்துவர்களுக்கு பற்றாக்குறை நிலவுகிறது என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இதில், 600இற்கும் அதிகமான பற்றாக்குறை விசேட மருத்துவ நிபுணர்களுக்கு நிலவுகிறது. இதனால், சில மருத்துவமனைகளின் செயல்பாடுகளுக்கு தடை ஏற்பட்டுள்ளதாகவும் அந்த அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

எவ்வாறாயினும், இந்த ஆண்டு இறுதிக்குள் 2 ஆயிரம் மருத்துவர்கள் சேவையில்

15

## 5 ஆயிரம் ஆசிரியர்கள் வெளியேறினர்

கொழும்பு, ஒக. 19

ஐந்து ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் உரிய அனுமதியின்றி நாட்டை விட்டு வெளியேறியுள்ளனர் என்று இலங்கை ஆசிரியர் சங்கத்தின் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

இதன்படி, கல்வி முறையில்

15

## மாகாண நிர்வாகத்தில் எம். பிக்களுக்கும் இடம்!

### ஜனாதிபதி ரணில் ஆலோசனை

கொழும்பு, ஒக. 19

பாராளுமன்றம் அடுத்த வருட இறுதி வரை செயல்படும் என்பதால் அதன் உறுப்பினர்களும் மாகாண சபை நிர்வாக செயல்பாடுகளில் இணைவதற்கு வாய்ப்பு வழங்கப்பட வேண்டும். ஆளுநருடன் இணைந்து செயல்பட விசேட ஆலோசனை குழுவை நியமிக்க எதிர்பார்க்கப்படுகிறது என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

மாகாணங்களின் ஆளுநர்கள், பிரதம

15

## 13ஆம் திருத்தத்தை வைத்து உதைபந்தாட்டம் ஆடாதீர்கள்

### எதிர்கட்சிகளை கோருகிறார் ஜனாதிபதியின் பிரதானி

கொழும்பு, ஒக. 19

அரசமைப்பின் 13ஆம் திருத்தத்தை வைத்துக் கொண்டு எதிர்கட்சிகள் உதைந்தாட்டம் ஆடாமல் பாராளுமன்றத்தில் விவாதித்து மக்களுக்கு தீர்வைப் பெற்றுக் கொடுக்க முன்வர வேண்டும். ஏனெனில் 13ஆம் திருத்தம் தொடர்பில் பாராளுமன்றத்துக்கு மாத்திரமே தீர்மானிக்க முடியும்.

- இவ்வாறு ஜனாதிபதியின் பாராளுமன்ற நடவடிக்கைகள் தொடர்பான பிரதானி ஆஷூ மாரசிங்க தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தாவில் அவர்

15

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

## இப்படியும் நடக்கிறது

காலம் காலமாக நம்மி டையே பழக்கத்தில் உள்ள சர்தார்ஜி நகைச்சுவைகள் நம்மை எப்படியாவது சிரிக்க வைத்து விடுகின்றன.

நம்மைச் சிரிக்க வைப்பதற் காகவே சர்தார்ஜி என்ற பாத் திரத்தை சிருஷ்டித்து அவரின் நகைச்சுவை கதைகளை நீண்ட காலத்துக்கு முன்னரே எழுதியி ருந்தனர். அந்த சர்தார்ஜி தலைப்பாகை கட்டியிருப்பார். தாடி வளத்திருப்பார். தனக்கே உரிய உடை ஒன்றையும் அணிந்திருப்பார்.

ஒரு நாள் சர்தார்ஜி, சின்ன தாக ஒரு ரீ. வி. வாங்க ஆசை பட்டு, எலக்ட்ரோனிக்ஸ் கடைக்கு போயிருந்தார். கடை காரனைக் கூப்பிட்டு ஒரு சின்ன ரீ. வியை காட்டி கேட்டார்.

'இந்த ரீ. வி. என்ன விலை?'

கடைகாரன் சர்தார்ஜியை ஏற இறங்க பார்த்துட்டு சொன்னான்

'இந்தக் கடையில் சர்தார் ஜிக்கெல்லாம் ரீ. வி. விற்கிற தில்லை...'

எப்படியும் இந்த ரீ. வியை வாங்கிடவேண்டும் என்று வீட்டுக்கு போய் தன்னுடைய 'கெட்அப்'பை மாற்றிக் கொண்டு வந்து கடைக்கார னைப் பார்த்து கேட்டார்,

'இந்த ரீ. வி. என்ன விலை?'

'இந்த கடையில சர்தார்ஜிக் கெல்லாம் ரீ. வி. விற்கிற தில்லை...'

சர்தார்ஜியால் பொறுக்க முடியவில்லை, கடைகாரன் கிட்ட பரிதாபமாக கேட்டார்,

'ரீ. வி. குடுக்கலைன்னா பர வாயில்லை, அட்லீஸ்ட், நான் சர்தார்ஜிதான்னு எப்படி கண்டுபிடிச்சே சொல்லு?'

கடைகாரன் சிரிச்சிக்கிட்டே சொன்னான், 'இது ரீ. வி. இல்லை, மைக்ரோவேவ் ஓவன் அதுதான்'.

குருந்தூர் மலையில் பொங் கல் வழிபாடுகள் பக்தி பூர்வ மாகவும் அசம்பாவிதம் எதுவு மின்றியும் நடந்து முடிந்தி ருக்கின்றது.

தமிழர்கள் ஏற்பாடு செய்த இந்தப் பொங்கலுக்கு எதிராக சிங்கள - பௌத்த மதவாதிகள் போராட்டத் துக்கு அழைப்பு விடுத்திருந்ததாலும் உதய கம்மன்பில போன்றவர்கள் குருந்தூர்மலையை நோக்கி அணிதிரளுமாறு அழைப்பு விடுத்திருந்ததைத் தொடர்ந்து அங்கு மோதல் நிலைமை ஏற்படலாம் என்று நேற்று இந்தப் பத்தியில் குறிப்பிட்டி ருந்தோம். ஆனால், அப்படி எதுவித அசம்பாவிதமும் இன்றி பொங்கல் வைபவம் நடந்து முடிந்திருக்கின்றது.

முன்னதாக, இந்த நாட்டில் மத வழிபாடுகளைத் தடுக்க எவருக்கும் உரிமை கிடையாது என்று ஜனாதிபதி ரணில் விக்கி ரமசிங்க திட்டவட்டமாக தெரி வித்திருந்தார்.

குருந்தூர்மலையில் தமிழர் கள் பொங்கல் வழிபாடுகளை செய்வதை தடுக்கும் வகையில் அங்கு திரண்டுவருமாறு கம் மன்பில அழைப்பு விடுத்திருப் பது தொடர்பாகவும், மண லாறு பகுதியில் (இப்போது வெலிஓயா) பொங்கலுக்கு எதிராக சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருப்பது தொடர் பாகவும் ஜனாதிபதியிடம் ஊடகவியலாளர்கள் கருத்துக் கேட்டபோதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தி ருந்தார்.

ஜனாதிபதியின் இந்தக் கருத்து காரணமாகத்தான், கம் மன்பிலவின் அழைப்பை சிங்கள மக்கள் கருத்தில் எடுக்க வில்லை என்று யாரும் வாதி டப்போவதில்லை. ஆனால், அசம்பாவிதம் எதுவுமின்றி பொங்கல் நடந்து முடிந்திருப் பது ஆறுதல் தருகின்றது.

குருந்தூர்மலையில் சிவன் ஆலயத்தை அமைக்க சைவர் களுடன் பௌத்தர்களும் இணைந்து அமைக்கவிருப்ப தாக நேற்றுமுன்தினம் யாழ்ப் பாணத்தில் வைத்து பௌத்த - சைவர்கள் கூட்டாக அறிவித் திருந்தமை பற்றி நேற்று இந்தப் பத்தியில் குறிப்பிட்டிருந்தேன்.

குருந்தூர்மலை விகாராதி பதி யாழ்ப்பாணம் வந்து யாழ். நாகவிகாரையில் அந்த விகாரா திபதி, தையிட்டி விகாராதிபதி, நாவற்குழி விகாராதிபதி மற் றும் இலங்கை சிவசேனை தலை வர் சச்சிதானந்தம் உட்பட மற்றும் சில அமைப்புக்கள் இணைந்து சிவன் ஆலயத்தை கட்டுவது தொடர்பாக கூட்டாக அறிவித்திருந்த னர்.

இதுதொடர்பாக நாக விகாரையில் நடைபெற்ற கூட் டம் குறித்து நேற்றைய பத்திரி கைகளில் வெளிவந்த செய்தி யில், அது ஓர் இரகசிய கூட்டம் என்றே அறிக்கையிட்டிருந்ததை அவதானிக்க முடிந்தது.

இந்தக் கூட்டம் நடந்து கொண்டிருக் கின்றபோதே இப்படியொரு கூட்டம் நடக் கின்றதா என்று கேட்டு ஊடக ஜாம்பவான் ஒருவர் இந்த ஊர்க் குருவியை தொடர்புகொண்டு கேட்டிருந்தார். அதுபற்றி இந்த ஊர்க்குருவி தகவல் அறிய முயன்றபோது, அப்படியொரு கூட்டம் நடந்துகொண்டிருப் பதை அறிய முடிந்தது.

ஏற்கனவே குருந்தூர் மலைக்கு விஜயம்செய்த சச்சிதா னந்தம், அங்கு விகாராதிபதியை சந்தித்தபோது அவரே சிவன் ஆலயத்தை எல்லோரும் இணைந்தே கட்டலாம் என்று யோசனையை சொல்லியதாக சச்சிதானந்தம் கூறியிருந்ததை நேற்று இந்தப் பத்தியில் தெரி வித்திருந்தேன்.

அந்தச் சந்திப்பின் தொடர்ச்சியாகவே நேற்று முன்தினம் சந்திப்பு நடந்தது. சந்திப்பின் முடிவில் அனை வரும் இணைந்தே ஊடக வியலாளர் மாநாட்டை நடத்தியுமிருந்தனர்.

அப்படியிருக்கையில், அந்த சந்திப்பு இரகசிய சந்திப்பு என் றும் ஏதோ அரசியல் கட்சிகள் இரகசியமாக சந்திப்பதுபோல அது நடந்ததாகவும் அறிக்கை யிட்டிருந்தன.

அந்தச் செய்திகளை படித்த போது சர்தார்ஜிதான் ஞாபகத் தில் வந்துபோனார்.

**- ஊர்க்குருவி.**

# மேர்வினின் கருத்தை வக்கிரப்படுத்தி அரசியல் செய்வதற்கு முயல்கிறார்கள்

## இப்படி சொல்கிறது ஈ. பி. டி. பி. கட்சி

யாழ்ப்பாணம், ஒக. 16

தமிழ் மக்களின் வாக்கு களை பகடையாக்கி அதி சொகுசு ஆடம்பர மாளிகை களை பெற்றுக்கொண்டு அன்று மௌனமாக இருந்து இந்த நாடு பௌத்த நாடு என்று அங்கீகாரம் அளித்த வர்கள் இன்று முன்னாள் அமைச்சர் (மேர்வின் சில்வா) ஒருவருடைய கருத்தை வக்கிரப்படுத்தி தமிழ் மக்கள் மீது அக்கினி அரசியலை மீண்டும் செய்ய முயற்சிக்கின் றார்கள் - இவ்வாறு கூறியுள் ளார் ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் (ஈ. பி. டி. பி) ஊடக பேச்சாளர் ஐயாத் துரை சிறீ ரங்கேஸ்வரன்.

யாழ். ஊடக அமையத்தில் நேற்று அவர் நடத்திய செய்தி யாளர் சந்திப்பிலேயே இத னைத் தெரிவித்தார்.

16 உறுப்பினர்கள் இருந்த சந்தர்ப்பத்தில் இந்த நாடு பௌத்த நாடு என்றும் பௌத்தத்துக்கே முன்னு ரிமை என்றும் தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் தலைமையில் பாராளுமன்றத்தில் இருந்த போது நீங்கள் முன்மொழிந்து அதற்கு துணை போனீர்களா இல்லையா என்று இன்று இவ்வாறு கருத்துக்கூறுப வர்கள் திரும்பிப் பார்க்க




வேண்டும்.

அதுமட்டுமல்லாது தமிழ் மக்களின் வாக்குகளை தமக்கு ஏற்றவகையில் ஒரு பகடை யாக பயன்படுத்திக் கொண்டி ருக்கும் - குறிப்பாக இரா. சம் பந்தன் எதிர்க்கட்சி தலைவ ருக்கு வழங்கப்படும் அதி சொகுசு ஆடம்பர மாளிகை கள் எல்லாம் பெற்றுக் கொண்டு, அன்று பேசாமல் மௌனமாக இருந்து, இந்த நாடு பௌத்த நாடு என்று சொல்லி அங்கீகாரம் வழங்கி விட்டு, இன்று முன்னாள் அமைச்சர் ஒருவருடைய கருத்தை வக்கிரப்படுத்தி தமிழ் மக்கள் மீது அக்கினி அரசியலை மீண்டும் செய்வ தற்கு முயற்சிக்கின்றார்கள்.

முன்பதாக நீங்கள் வலிந்து சென்றே மைத்திரி அரசாங்கத் துக்கு அன்று 16 பாராளு மன்ற உறுப்பினர்களும் ஆதரவு வழங்கினீர்கள். அன்றைய காலகட்டத்தில் தான் குறிப்பாக 2015 ஆம் ஆண்டில்தான் வன ஜீவராசி கள் வனவளத் திணைக்களம் மற்றும் தொல்லியல் திணைக் களம் ஆகியவற்றுக்கு அதி காரங்கள் அசுரமாக வழங் கப்பட்டன.

இவற்றுக்கெல்லாம் அன்று அவர்களுக்கு அங்கீகா ரங்களையும் பலத்தையும் வழங்கியிருந்தீர்கள். இன்று மக்களை வழமைபோன்று ஏமாற்ற முயல்கிறீர்கள். அன்று முற்றுமுழுதாக மைத்திரி யுகத்தில் அவர் களுக்கு கண்மூடிக்கொண்டு ஆதரவை வழங்கியதால்தான் இந்த சம்பவங்கள் இன்று உச்சம் பெற்றிருக்கின்றன.

குறிப்பாக முல்லைத்தீவு பிரதேசத்திலே 35.6 வீதமான நிலங்கள் (84664.33 ஹெக் ரெயர்) வனவளத் திணைக் களத்தால் ஒதுக்கப்பட் டுள்ளன. அதே சமயம் அங்க 3,989 பேர் குடியிருக்க காணி இல்லாது திண்டாடி வரு கின்றனர்.

இந்த நிலையை உரு வாக்கியது தமிழ் தேசிய கூட் டமைப்பினர்தான். அன்று தூர நோக்கத்துடன் சிந்தித்து மக்களின் நலன்களிலிருந்து முடிவுகளை எடுத்திருந்தால் இன்று இந்த நிலைமை ஏற் பட்டிருக்காது - என்றும் கூறி னார்.

# சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் 72ஆவது வருட பூர்த்தி கொழும்பில்

கொழும்பு, ஒக. 19

குருநாகல் பண்டுவஸ்நுவர வில் அடுத்த மாதம் 2ஆம் திகதி, நடத்த திட்டமிட்டி ருந்த சுதந்திர கட்சியின் 72 ஆவது வருடப் பூர்த்தியை கொழும்பில் நடத்த தீர்மா னிக்கப்பட்டுள்ளது.

அந்த கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன, கட்சி யின் தொகுதி மற்றும் மாவட்ட அமைப்பாளர்க ளுக்கு கடிதம் மூலம் அறிவித்துள்ளார்.

நாட்டில் நிலவும் பொரு ளாதார நெருக்கடி நிலைமை காரணமாக குறித்த நிகழ்வில் மக்களை பங்கேற்க நிதி நெருக்கடிகள் உள்ளன.

அத்தோடு இதுபோன்ற பாரியளவான நிகழ்வுகள் தற் போது நடத்துவது ஏற்புடை யதல்ல என அந்த கட்சியின் தலைவர் முன்னாள் ஜனாதி பதி மைத்திரிபால சிறிசேன, மாவட்ட மற்றும் தொகுதி அமைப்பாளர்களுக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தநிலையில், ஸ்ரீ ஜய வர்தனபுர கோட்டையில் உள்ள விருந்தகத்தில் உள்ள அடுத்த மாதம் 3ஆம் திகதி, சுதந்திர கட்சியின் ஆண்டு நிறைவு விழா நடத்த தீர்மா னிக்கப்பட்டுள்ளதாக தெரி விக்கப்படுகிறது. (அ)

# நூல்வெளியீடு

யாழ்ப்பாணம், ஒக. 19

உ. இ. ம. மகராஜா சிறீ ராஜசேகரா பதிப்பித்த சிங்கை ஆரியச்சக்கரவர்த்தி செகராச சேகரனின் கைலாய அந்தாதி நூல் வெளியீட்டு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நடைபெறவுள்ளது.

சங்கானை நூல் நிலைய மண்டபத்தில் வடக்கு மாகாண கூட்டுறவு ஆணைக் குழு முன்னாள் உறுப்பினர் ஏ. சின்னத்தம்பி தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ். மாவட்ட கூட்டுறவு சபையின் முன்னாள் தலைவர் தா. கந்தசாமி கலந்து கொள் வார்.

நூலின் நயவுரையை பொறியியலாளர் மு. தில்லை நாதன், சைவப் புலவர் வெற்றி வேல் சக்திவேல் வழங்குவார். (ஐ)

# வேலணை பிரதேச செயலகத்தின் பண்பாட்டு விழா நேற்று நடந்தது!



யாழ்ப்பாணம், ஒக. 19

வேலணை பிரதேச செயல கத்தின் பண்பாட்டு விழா நேற்று வேலணை மத்திய கல் லூரியின் பிரதான மண்ட பத்தில் நடைபெற்றது.

வேலணை பிரதேச செய லாளர் கைலாயபிள்ளை சிவ கரன் தலைமையில் இடம் பெற்ற இந்நிகழ்வில் யாழ். மாவட்ட செயலாளர் அம் பலவாணர் சிவபாதசுந்தரன் பிரதம விருந்தினராக கலந்து கொண்டிருந்தார்.

வட மாகாண பண்பாட்ட லுவல்கள் திணைக்களமும் தேசிய ஒற்றுமை மற்றும் ஒரு மைப்பாட்டுக்கான செயலக மும் வேலணை பிரதேச செய லகம் மற்றும் பிரதேச கலா சார பேரவையும் இணைந்து நடத்திய இந்நிகழ்வில் இந்தப் பிரதேசத்தை சேர்ந்த 13 கலை ஞர்கள் கௌரவிக்கப்பட்ட னர். (ஐ)

ஈழநாடு
Eelanadu
19.08.2023 சனிக்கிழமை
சோபகிருது வருடம், ஆவணி 2

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# சர்வதேசத்திடமிருந்து அதிகம் எதிர்பார்ப்பது

சர்வதேச சமூகம் தேசிய இனப்பிரச்னையில் அழுத்தங்களை வழங்க வேண்டுமென்று தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பேச்சாளர் சுரேஷ் பிறேமச்சந்திரன் தெரிவித்திருக்கின்றார். இவ்வாறான வேண்டுகோள்கள் தமிழ் அரசியல் சூழலுக்கு புதிதல்ல. யுத்தம் நிறைவுற்றதன் பின்னரான கடந்த பதினான்கு ஆண்டுகளாக இவ்வாறான கோரிக்கைகளுடன்தான் தமிழர் அரசியல் பயணித்துக் கொண்டிருக்கின்றது. கேள்வி - இன்னும் எவ்வளவு காலத்துக்கு இதனை உச்சரித்துக் கொண்டிருக்கப் போகின்றோம்?

அண்மையில், தமிழ் கட்சிகளின் தலைவர்களை (பாராளுமன்ற உறுப்பினர்கள்) சந்தித்திருந்த இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் எல்லாவற்றுக்கும் சர்வதேச சமூகத்திடம் முறையிடக் கூடாதென்று குறிப்பிட்டிருந்தார். இந்த நிலையில் சர்வதேச சமூமென்பது என்ன - அது எந்தளவு தூரம் தலையீடு செய்யும் - என்னும் கேள்விகளுக்கு பதிலில் தெளிவுடன் இருப்பது அவசியம். இல்லாவிட்டால் தமிழர் அரசியல் சுயமுயற்சியின்றி மற்றவர்களுக்காக காத்துக் கொண்டிருக்கும் ஒன்றாகவே சுருங்கிப் போக நேரிடும். இதுரையில் இதுதான் நடந்திருக்கின்றது.

கடந்த பதினான்கு வருடங்களாக பலரும் பல முயற்சிகளில் ஈடுபட்டனரெனக் கூறப்பட்டது. தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகளும் புலம்பெயர் அமைப்புகளும் பலவாறான சர்வதேச உரையாடல்களில் ஈடுபட்டன என்று கூறப்பட்டது. ஆனால், அவற்றின் விளைவுகளை நோக்கினால் குறிப்பிட்டு சொல்லக்கூடிய நிலையில் எதுவுமில்லை. ஏன்? இந்தக் கேள்விக்கான பதில் தொடர்பில் அனைவரும் நேர்மையாக சிந்திக்க முன்வர வேண்டும்.

சர்வதேச சமூகம் என்பது அடிப்படையில் பலம் பொருந்திய நாடுகள்தான். பலம்பொருந்திய நாடுகளின் நலன்களும் அவற்றை வெற்றி கொள்வதற்கான இடையறாத அரசியல், பொருளாதார, இராணுவ நகர்வுகளுமே சர்வதேச அரசியலாகும். இந்த நகர்வுகளில் நீதியின் அடிப்படையில் விடயங்கள் தீர்மானிக்கப்படுவதில்லை - மாறாக நலன்களின் அடிப்படையிலேயே விடயங்கள் தீர்மானிக்கப்படுகின்றன. இதனைப் புரிந்துகொண்டால் இலங்கையின் இனப்பிரச்னையில் பலம்பொருந்திய நாடுகள், எவ்வாறான அணுகுமுறையை காலத்துக்குக் காலம் முன்னெடுத்திருக்கின்றன - முன்னெடுத்து வருகின்றன என்பதை இலகுவாகப் புரிந்துகொள்ள முடியும்.

இலங்கை விடயத்தில், இந்தியாவின் அணுகுமுறை பிராந்திய ரீதியானது. அயல்நாடுகளில் தனது செல்வாக்கை தக்கவைத்தல் என்னும் அடிப்படையிலேயே இந்தியா விடயங்களை கையாண்டு வருகின்றது. இலங்கையின் ஆட்சியாளர்களின் அணுகுமுறைகளுக்கு ஏற்ப இந்தியாவின் அணுகுமுறைகள் அமைகின்றன. அமெரிக்காவை பொறுத்தவரையில் அதன் அணுகுமுறை உலகளாவிய நலன்கள் தொடர்பானது. இதில், உலகளவில் மனித உரிமைகள் மற்றும் தாராளவாத அணுகுமுறைகளை பாதுகாத்தல் என்னும் அடிப்படையில் அமெரிக்காவின் தலையீடுகள் அமைகின்றன. ஆனால், இந்த அணுகுமுறையும் தற்போது அதிகரித்துவரும் சீன செல்வாக்கால் கேள்விக்கு உள்ளாகியிருக்கின்றது.

இந்தப் பின்புலத்தில் நோக்கினால் இலங்கை விடயத்தில் சிங்கள பெரும்பான்மையை அதிகம் அதிருப்திக்கு உள்ளாக்கிவிடக் கூடாதென்னும் அடிப்படையிலேயே அமெரிக்காவின் அணுகுமுறை அமைந்திருக்கின்றது. இலங்கையின் மனித உரிமைகள் விவகாரத்தில் கரிசனையை காண்பிக்கும் ஏனைய மேற்குலக நாடுகள் அவ்வப்போது சில கருத்துகளை முன்வைத்தாலும்கூட, அவர்களின் அணுகுமுறையும் இலங்கையிலிருந்து அதிகம் விலகிவிடக் கூடாதென்னும் அப்படையிலேயே அமைந்திருக்கின்றன.

இந்த நிலையில், தமிழ் மக்களின் அரசியல் உரிமைக்கான பிரத்தியேக ஈடுபாடு என்னும் வகையில் எந்தவொரு தலையீடும் இல்லை. சிங்கள ஆளும் வர்க்கம் இதில் மிகவும் தெளிவாக இருக்கின்றது. இதன் காரணமாகவே, தமிழ் மக்களுக்கான தேசிய இனப்பிரச்னை விவகாரத்தை சிங்கள ஆட்சியாளர்கள் தொடர்ந்தும் இலகுவாக இழுத்தடித்து வருகின்றனர். 13ஆவது திருத்தச் சட்டத்தைக்கூட, முழுமையாக அமுல்படுத்தும் விடயத்தில் கூட முன்னோக்கி நகர முடியவில்லை. இந்த விடயம் தொடர்பில் தெளிவான பார்வை தமிழ்த் தேசிய தரப்புகளிடம் இருக்க வேண்டும்.

# நல்லூர் பெருந்திருவிழாவில் பஜனை!

*யாழ்ப்பாணம், ஓக. 19*

நல்லூர் கந்தப்பெருமான் பெருந்திருவிழா காலத்தில் மாணவர்களிடையே ஆன்மிக விழிப்புணர்வை ஏற்படுத்தும் விதமாகவும் இறை பக்தியை அதிகரிக்கும் முகமாகவும் நடத்தப்படுகின்ற பஜனை நிகழ்வு வழமை போல இம்முறையும் சிவகுரு ஆதீனத்தின் ஏற்பாட்டில் ஸ்தாபக ஆதீனமுதல்வர் தவத்திரு வேலன் சுவாமிகளின் வழிகாட்டலில் நடைபெறவுள்ளது.

கொடியேற்றத் திருவிழாவான நாளை மறுதினம் திங்கட்கிழமை முதல் கொடியிறக்கத் திருவிழாவான எதிர்வரும் செப்ரெம்பர் 14ஆம் திகதி வரை முருகப் பெருமான் காலையில் உள்வீதியில் வலம் வரும் போதும் மாலையில் வெளி வீதி வலம் வரும்போதும் நடைபெறும்.

இந்தப் பஜனை நிகழ்வில் பங்குபற்றி நல்லைக் கந்தப் பெருமானின் திருவருளைப் பெற வருமாறு பாடசாலை மாணவர்களையும், அறநெறி பாடசாலை மாணவர்களையும் முருகப் பெருமான் அடியவர்களையும் சிவகுரு ஆதீனம் அன்புடன் அழைக்கின்றது.

பஜனையில் பங்குபற்ற விரும்புகின்ற பாடசாலைகளும் (அதிபர் /பொறுப்பாசிரியர் /சைவசமய ஆசிரியர் / சங்கீத ஆசிரியர் / ஆசிரியர் /அறநெறி ஆசிரியர்) ஆன்மீக சமய நிறுவனங்களும் மேலதிக விவரங்களைப் பெற விரும்புகின்ற ஆர்வலர்களும் இல. 692, பருத்தித்துறை வீதி, நல்லூரில் அமைந்துள்ள சிவகுரு ஆதீனத்தில் அல்லது 077 222 0103 எனும் தொலைபேசி இலக்கத்தில் தொடர்பு கொள்ளுமாறு சிவகுரு ஆதினம் கேட்டுள்ளது. (ஐ)

# மைமல் பொழுதில் நீர் தொடர்பான உரையாடல்

*யாழ்ப்பாணம், ஓக. 19*

வடமாக நீர் உரையாடல் வட்டம், இளைய நீர் துறைமையாளர் வடக்கு வட்டம் மற்றும் யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம் இணைந்து நடத்தும் மைமல் பொழுது உரையாடல் தொடரின் அமர்வு 24 எதிர்வரும் வியாழக்கிழமை மாலை 4:30 தொடக்கம் 6 மணி வரை பல்கலைக்கழக நூலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

முனைவர் ஜோகேஷ் ஜடேஜா அவர்கள் வளவாளராக கலந்து கொள்ளும் உரையாடல் தொடரில், அளவிடல் கண்காணித்தல் மூலம் நிலத்தடி நீர் வளம் பேணலில் மக்கள் மைய நடவடிக்கைகள் இந்திய அனுபவங்கள் எனும் தலைப்பில் நடைபெறவுள்ளது.

வளவாளர் முனைவர் ஜோகேஷ் ஜடேஜா அவர்கள் மோர்பி எனப்படும் நீர் தொடர்பான செயல் திட்டத்தின் ஊடாக இந்திய குஜராத் ராஜஸ்தான் மாநிலங்களில் ஐந்து ஆண்டுகளாக முன்நின்று வழிநடத்தி மக்கள் ஈடுபாட்டை வளர்த்தெடுத்த சாதனையாளர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# ஏழாலை இசிதோர் முன்பள்ளி சிறுவர்களின் சந்தை நிகழ்வு!



*யாழ்ப்பாணம், ஓக. 19*

ஏழாலை புனித இசிதோர் முன்பள்ளியின் சிறுவர் சந்தை நிகழ்வு முன்பள்ளி மண்டபத்தில் ஆசிரியை திருமதி.புஷ்பராாணி ரஜிதரன் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது.

புதன்கிழமை நடந்த சிறுவர் சந்தை நிகழ்வில் இலங்கை வங்கி யின் மல்லாகம் கிளை முகா மையாளர் செ. பார்த்தீபன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.

முன்பள்ளி சிறார்களிடம் மறைந்து கிடக்கும் உள்ளார்ந்த திறன்களை வெளிக் கொண்டு வரும் நோக்கில் பதினான்காவது தடவையாக இந்தச் சிறுவர் சந்தை நிகழ்வு ஏற்பாடு செய்து நடத்தப்பட்டது.


சிறுவர் சந்தை நிகழ்வில் முன்பள்ளிச் சிறார்கள் மிகவும் ஆர்வத்துடன் பங்குபற்றி வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.

பெற் றோர்கள் சிறுவர் சந்தை சிறப்பாக இடம் பெறுவதற்குப் பூரண ஒத்துழைப்பு வழங்கினர்.

முன்பள்ளி சிறார்களின் உறவுகள், ஏழாலை புனித இசிதோர் றோ. க. த. க. பாடசாலையின் மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் கிராமத்தவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டு பொருட்கள் கொள்வனவில் ஈடுபட்டனர்.

நிகழ்வின் இறுதியில் இலங்கை வங்கி மல்லாகம் கிளையினரின் அனுசரணையில் சிறுவர் சந்தையில் பங்கேற்ற அனைத்து சிறார்களுக்கும் வங்கி முகாமையாளர் பார்த்தீபன் ஊக்குவிப்புப் பரிசில்கள் வழங்கி வைத்தார். (ஐ)

# அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



ஏழுநாடு






**மேடம்**
மற்றவர்களை நம்பி எந்த வேலையையும் ஒப்படைக்கக் கூடாது என்று முடிவெடுப்பீர்கள். வியாபாரத்தில் புது தொடர்பு கிடைக்கும். பெரிய பொறுப்புகள் தேடி வரும். நினைத்தது நிறைவேறும்.

**இடபம்**
எதிர்ப்புகளையும் தாண்டி முன்னேறுவீர்கள். மகளுக்கு நல்ல வரன் அமையும். வியாபாரத்தில் வேலையாட்களின் ஆதரவுக்கிட்டும். உத்தியோகத்தில் திருப்தி உண்டாகும்.

**மிதுனம்**
உங்கள் பேச்சில் அனுபவ அறிவு வெளிப்படும். பிள்ளைகளின் பெருமைகளை மற்றவர்களிடம் சொல்லி மகிழ்வீர்கள். உங்களின் உழைப்பிற்கு பாராட்டு கிடைக்கும். சிறப்பான நாள்.

**கடகம்**
குடும்பத்தினருடன் சுபநிகழ்ச்சிகளில் கலந்துக் கொள்வீர்கள். பழைய நல்ல சம்பவங்களை நினைவுகூர்ந்து மகிழ்வீர்கள். உத்தியோகத்தில் உங்கள் கருத்திற்கு ஆதரவு பெருகும்.

**சிம்மம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் திட்டமிடாத செலவுகளும் பயணங்களும் குறுக்கிடும். வியாபாரத்தில் வேலையாட்கள் ஒத்துழைப்பு சுமாராக இருக்கும். விமர்சனங்களையும் தவிர்ப்பது நல்லது.

**கன்னி**
குடும்பத்தைப் பற்றிய கவலைகள் வந்து நீங்கும். நண்பர்கள் உதவுவார்கள். வியாபாரத்தில் போட்டிகளை சமாளிப்பீர்கள். பொறுப்புகள் அதிகரிக்கும். கவனம் தேவைப்படும் நாள்.

**துலாம்**
தவறு செய்பவர்களை தட்டிக் கேட்பீர்கள். வெளிவட்டாரத்தில் அந்தஸ்து உயரும். வியாபாரத்தில் எதிர்பார்த்ததை விட லாபம்அதிகரிக்கும். முயற்சிகள் பலிதமாகும். முடிவுகள் எடுக்கும் நாள்.

**விருட்சிகம்**
எதிர்பாராத சந்திப்பு நிகழும். வாகன வசதிப் பெருகும். வியாபாரத்தில் நெளிவு சுளிவுகளை கற்றுக் கொள்வீர்கள். உயரதிகாரி உங்களிடம் சில முக்கிய பொறுப்புகளை ஒப்படைப்பார். சாதிக்கும் நாள்.

**தனுசு**
உங்கள் செயலில் வேகம் கூடும். பிள்ளைகளால் மதிப்பு கூடும். நீண்ட நாள் பிரச்னைகளுக்கு தீர்வு காண்பீர்கள். வியாபாரம் செழிக்கும். முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். முயற்சிகள் பலிதமாகும் நாள்.

**மகரம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் முன் கோபத்தை குறையுங்கள். உங்கள் அவசர முடிவுகள் தான் காரணம் என்பதை உணர்வீர்கள். வியாபாரத்தில் பற்று வரவு சுமார்தான். வெற்றி பெறும் நாள்.

**கும்பம்**
கணவன்-மனைவிக்குள் ஆரோக்கியமான விவாதங்கள் வந்து நீங்கும். புதியவர்கள் அறிமுகமாவார்கள். குடும்பத்தில் பிரச்னை நீங்கும். சகோதரர்கள் உதவிகரமாக இருப்பார்கள்.

**மீனம்**
எதிர்பாராத பணவரவு உண்டு. உறவினர் நண்பர்கள் உங்களிடம் முக்கிய விஷயங்களை பகிர்ந்துக் கொள்வார்கள். வியாபாரத்தில் லாபம் உண்டு. அதிகாரிகளுக்கு நெருக்கமாவீர்கள்.

# கச்சதீவை மீட்பதே மீனவர் பிரச்னைக்கு முற்றுப்புள்ளி

## முதல்வர் ஸ்டாலின் தெரிவிப்பு

இராமநாதபுரம், ஓக. 19

கச்சதீவை மீட்பதே தமிழ்நாடு மீனவர் பிரச்னைக்கு முற்றுப்புள்ளியாக அமையும் என்று இராமாநாபுரம் மாவட்டம் மண்டபத்தில் நடைபெற்ற மீனவர் மாநாட்டில் முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

இராமநாதபுரத்தில் மீனவர்களுக்கான மாநாடு நேற்று நடைபெற்றது. இதில், பங்கேற்று பேசியபோதே முதல்வர் மேற்கண்டவாறு கூறினார்.

இந்திய அளவில் மீன்பிடி தொழிலில் 5ஆவது பெரிய மாநிலமாக தமிழ்நாடு உள்ளது. மீனவர்களுக்கு அளித்த வாக்குறுதியை பிரதமர் நரேந்திரமோடி நிறைவேற்றவில்லை. மீனவர் பிரச்னைக்கு தீர்வு காண பா. ஜ. க. அரசு என்ன செய்துள்ளது? பா. ஜ. க. ஆட்சிக்கு வந்த பின் மீனவர்கள் மீது 48 முறை தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. 9 ஆண்டுகளில் 619 மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். தமிழ்நாடு மீனவர்கள் மீதான தாக்குதலுக்கு பா. ஜ. க. அரசே பொறுப்பு.

கச்சதீவை தாரை வார்த்ததற்கு தி. மு. க. அரசு காரணம் என கூறுவதில் எந்த உண்மையும் இல்லை. கச்சதீவை இலங்கைக்கு கொடுக்கக்கூடாது என இந்திராகாந்தியிடம் அப்போதைய முன்னாள் முதல்வர் கருணாநிதி டில்லி சென்று வலியுறுத்தினர். தொடர்ந்து கச்சதீவு இந்தியாவுக்கு குறிப்பாக இராமநாதபுரம் சமஸ்தானத்துக்கு சொந்தமானது என்ற ஆதாரத்தை திரட்டிய கருணாநிதி இந்திய அரசிடம் வழங்கினர்.

இந்திய அரசு இலங்கை அரசுடன் போட்ட ஒப்பந்ததை இரத்து செய்ய இந்திய அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் இல்லையெனில் வரும் பாராளுமன்ற மன்ற தேர்தலில் அமைய உள்ள புதிய கூட்டணி அரசு நடவடிக்கை எடுக்கும். கச்சதீவை மீட்பதே மீனவர் பிரச்னைக்கு முற்றுப் புள்ளியாக அமையும்” - என்றார்.

(ஐ)

# அ. தி. மு. க. மதுரை மாநாட்டுக்கு தடை விதிக்க நீதிமன்று மறுப்பு

மதுரை, ஓக. 19

மதுரையில் நடைபெறவுள்ள அ. தி. மு. க. மாநாட்டுக்கு தடை கோரிய மனுவை தள்ளுபடி செய்து உயர்நீதிமன்ற மதுரை கிளை உத்தரவிட்டுள்ளது.

காரைக்குடியைச் சேர்ந்த சேதுமுத்துராமலிங்கம் உயர் நீதிமன்ற மதுரை கிளையில் தாக்கல் செய்த மனுவில்,

இந்த மாநாட்டால் பட்டாசுகள் வெடிக்கப்படும், விமான சேவைக்கு பாதிப்பு ஏற்படும் எனவே மாநாட்டை நடத்த தடை விதிக்க வேண்டும் என்று கோரினார்.

நேற்று இந்த மனு விசாரணைக்கு எடுக்கப்பட்டது. இதன்போது, மாநாடு நிகழ்ச்சி முழுவதும் எவ்வித வெடிபொருட்களோ, பட்டாசுகளோ வெடிக்க மாட்டோம் என உறுதிமொழி வழங்கியுள்ளோம் என்று அ. தி. மு. க. தரப்பில் உறுதியளிக்கப்பட்டது.

நான்கு மாதத்துக்கு முன்பே மாநாடு நடைபெறுவது குறித்து அறிவிப்பு செய்து விட்டனர் கடைசி நேரத்தில் தடை கேட்டால் எவ்வாறு முடியும் என கேள்வி எழுப்பிய நீதிபதிகள், மாநாட்டுக்கு தடை கோரிய மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிட்டனர்.

(ஐ)

# பிரதமர் நரேந்திர மோடியை விமர்சிக்க தகுதி வேண்டும்!

## பா. ஜ. க. தமிழக தலைவர்



சென்னை, ஓக. 19

இராமேஸ்வரமும் காசியைப் போல விரைவில் உலகப் புகழ் பெற்ற தலம் ஆகும். வாக்குறுதி கொடுத்து விட்டு மக்களை ஏமாற்ற பிரதமர் நரேந்திர மோடி, தி. மு. க.காரர் அல்ல. அவரை விமர்சிக்க ஒரு தகுதி வேண்டும்” என்று பா. ஜ. க. மாநிலத் தலைவர் அண்ணாமலை கூறியுள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

“தி. மு. கவின் குடும்ப ஆட்சி பயிற்சிப் பாசாறையில் வழக்கம் போல யாரோ எழுதி கொடுத்த துண்டுசீட்டை பார்த்து அதில் என்ன எழுதியிருக்கிறது என்றே தெரியாமல் கடகடவென்று ஒப்பித்துவிட்டுப் போயிருக்கிறார் தமிழக முதல்வர் ஸ்டாலின்.

தமிழக மீனவர் சகோதரர்கள் மீது அக்கறை உள்ளது போன்ற முதல்வரின் நடிப்பு அவரது மகன் அமைச்சர் உதயநிதி நடிப்பை விஞ்சிவிட்டது. 2004 -2014 பத்து ஆண்டுகளில் காங்கிரஸ் கூட்டணியில் பசையான துறைகளை வாங்கிக் கொண்டு நாள்தோறும் மீனவ சகோதரர்கள் தாக்கப்பட்டபோதும், கொல்லப்பட்டபோதும், அன்றைய வருமானக் கணக்கில் மட்டுமே முழு கவனத்தையும் வைத்திருந்த உங்கள் நீலிக் கண்ணீரை எல்லாம் மக்கள் நம்பிய காலம் முடிந்து போய்விட்டது.

உங்கள் கட்சிக் கூட்டத்தில் நீங்கள் என்ன வேண்டுமானாலும் பேசிக் கொள்ளலாம். பொதுமக்கள் மத்தியில் இதே துண்டுச் சீட்டு இனியும் எடுபடாது என்பதை உணர்ந்து கொள்ளுங்கள். புயலில் பாதிக்கப்பட்ட தனுஷ்கோடிக்கு பிரதமர் மோடி ஆட்சியில்தான் சூரிய ஒளி சக்தி மூலம் மின்சார வசதி வந்தது என்பதை மறந்துவிடக்கூடாது.

பிரதமர் நரேந்திர மோடி, மீனவ சகோதரர்களுக்காக, தனி துறையை அமைத்து பல்வேறு நலத்திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறார்.

பிரதமர் நரேந்திர மோடி கொடுத்த வாக்குறுதிகள் ஒவ்வொன்றையும் உங்கள் கூட்டணியைப் போன்ற மக்கள் விரோத சக்திகளைத் தாண்டி, முழுமையாக நிறைவேற்றிக் கொண்டிருக்கிறார். இராமேஸ்வரமும் காசியைப் போல விரைவில், உலகப் புகழ்பெற்ற தலம் ஆகும். வாக்குறுதி கொடுத்து விட்டு மக்களை ஏமாற்ற அவர் தி. மு. ககாரர் அல்ல. அவரை விமர்சிக்க ஒரு தகுதி வேண்டும் - என்றார்.

(ஐ)

# 54,979 குடும்பங்களுக்கு குடிதண்ணீர் தட்டுப்பாடு!

## கடுமையான வறட்சியே காரணம்

கொழும்பு, ஓக. 19

**கடும் வரட்சி காரணமாக நாட்டின் 15 மாவட்டங்களில் 54979 குடும்பங்கள் கடுமையான குடிதண்ணீர் தட்டுப்பாட்டுக்கு முகம் கொடுத்து வருவதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் பணிப்பாளர் நாயகம் ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் சுதந்த ரணசிங்க தெரிவித்தார்.**

கடுமையான நீர்ப் பற்றாக்குறையை எதிர்நோக்கும் இந்தக் குடும்பங்களில் ஒரு இலட்சத்து எண்பத்து மூவாயிரத்து முப்பத்தெட்டு பேர் அடங்குவதாக பணிப்பாளர் நாயகம் கூறினார்.

இரத்தினபுரி, திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை, புத்தளம், குருநாகல், யாழ்ப்பாணம், மன்னார், முல்லைத்தீவு, வவுனியா, பதுளை, மொனராகலை, அம்பாந்தோட்டை, கம்பஹா மற்றும் மாத்தளை ஆகிய 15 மாவட்டங்கள் கடுமையான நீர்ப் பற்றாக்குறையை எதிர்நோக்கும் மாவட்டங்களாகும்.

கடுமையான நீர்ப் பற்றாக்குறையை எதிர்நோக்கும் அதிகளவான மக்கள் யாழ்ப்பாண மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள். அந்த மாவட்டத்தில் கடுமையான தண்ணீர் பற்றாக்குறையை எதிர்கொள்ளும் குடும்பங்களின் எண்ணிக்கை 21,999 ஆகும். அந்தக் குடும்பங்களில் 70238 பேர் அடங்குவர்.

கடுமையான குடிதண்ணீர் தட்டுப்பாட்டை எதிர்நோக்கும் மக்களுக்கு நீர் விநியோகம் செய்வதற்கான விசேட வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்த மேஜர் ஜெனரல் சுதந்த ரணசிங்க, நீர் விநியோகத்திற்காக நாடு முழுவதும் 200 பவுசர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

அம்பாந்தோட்டை மாவட்டத்தில் தண்ணீர் பிரச்னை மிகவும் மோசமாகி வருவதாகவும் அவர் கூறினார்.

இரத்தினபுரி மாவட்டத்தில் 4039 குடும்பங்களும், திருகோணமலை மாவட்டத்தில் 2320 குடும்பங்களும், மட்டக்களப்பு மாவட்டத்தில் 8892 குடும்பங்களும், அம்பாறை மாவட்டத்தில் 7739 குடும்பங்களும், புத்தளம் மாவட்டத்தில் 786 குடும்பங்களும், குருநாகல் மாவட்டத்தில் 14,433 குடும்பங்களும், மன்னார் மாவட்டத்தில் 1952 குடும்பங்களும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 952 குடும்பங்களும், வவுனியா மாவட்டத்தில் 450 குடும்பங்களும், பதுளை மாவட்டத்தில் 329 குடும்பங்களும், மொனராகலை மாவட்டத்தில் 140 குடும்பங்களும், அம்பாந்தோட்டை மாவட்டத்தில் 1513 குடும்பங்களும், கம்பஹா மாவட்டத்தில் 922 குடும்பங்களும், மாத்தளை மாவட்டத்தில் 263 குடும்பங்களும் கடுமையான நீர் பற்றாக்குறையை எதிர்நோக்கியுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது. .

இதற்கிடையில், இந்த மாவட்டங்களில் உள்ள லட்சக்கணக்கான வனவிலங்குகளும் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ளதாக வனவிலங்கு பாதுகாப்பு திணைக்களம் தெரிவித்துள்ளது.

(அ)

# ஜி.எஸ்.பி பிளஸ் வரிச்சலுகையை இலங்கை இழந்தால் பின்னடைவு!

கொழும்பு, ஓக. 19

ஜி.எஸ்.பி பிளஸ் வரிச்சலுகையை இலங்கை இழந்தால், அதன் பிராந்திய நாடுகளை விட பொருளாதாரத்தில் பின்னடைவை சந்திக்கவேண்டிய நிலை ஏற்படும் என இலங்கைக்கான ஐரோப்பிய ஒன்றியத் தூதுவர் டெனிஸ் சைபி தெரிவித்தார்.

உலகளாவிய ஒருங்கிணைப்பை மேம்படுத்துவதில் இலங்கை தமது முயற்சிகளை துரிதப்படுத்தவேண்டிய அவசரத் தேவையையும் இலங்கைக்கான ஐரோப்பிய ஒன்றிய தூதுவர் வலியுறுத்தினார்.

தற்போது இலங்கையை முக்கிய சந்தைகளில் ஒருங்கிணைப்பது ஜி.எஸ்.பி. பிளஸ் என்றும், இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ளாமல் புறக்கணிப்பது நாட்டை குறிப்பிடத்தக்க பாதகத்திற்கு உள்ளாக்கக்கூடும் என்றும் டெனிஸ் சைபி சுட்டிக்காட்டினார்.

(அ)

# இடமாற்ற உத்தரவை நடைமுறைப்படுத்தாத ஆசிரியர்களின் சம்பளம் இடைநிறுத்தப்படும்

கொழும்பு, ஓக. 19

இடமாற்ற உத்தரவை நடைமுறைப்படுத்தாத ஆசிரியர்களின் சம்பளம் இடைநிறுத்தப்படும் என கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

தற்போதுள்ள ஆசிரியர் வெற்றிடங்களை கருத்திற்கொண்டு இந்த தீர்மானம் அமுல்படுத்தப்படுவதாக அமைச்சு தெரிவித்துள்ளது.

இடமாற்ற உத்தரவுக்கு அமைய செயற்படுமாறு பல தடவைகள் அறிவிக்கப்பட்டுள்ளபோதும் அதனை பொருட்படுத்தாது இடமாற்றம் பெற்ற ஆசிரியர்கள் முன்பு பணியாற்றிய பாடசாலைகளிலேயே தொடர்ந்து பணியாற்றுவதாக முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

ஆசிரியர்கள் இடமாற்றம் பெற்றுச் செல்வதால் குறித்த இடத்துக்கு வெற்றிடம் நிலவும் என்பதால் குறித்த ஆசிரியர்களை அதே பாடசாலையில் தொடர்ந்தும் பணியாற்ற அனுமதிக்குமாறு அதிபர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

எனினும் ஆசிரியர் பற்றாக்குறை உள்ள பாடசாலைகளுக்கு உபரி ஆசிரியர்களை நியமிக்கும் திட்டம் உள்ளதாக கல்வி அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.

(அ)

# இலங்கையில் எதிர்வரும் வருடங்களில் கடும் குடிதண்ணீர் நெருக்கடி ஏற்படும்!

கொழும்பு, ஓக. 19

இலங்கை எதிர்வரும் வருடங்களில் பாரிய குடிதண்ணீர் பிரச்னையை எதிர்கொள்ளும் என ஸ்ரீஜெயவர்த்தனபுர பல்கலைகழகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் மேத்திக்கா விதானகே எச்சரித்துள்ளார்.

அரசாங்கம் இதனை எதிர்கொள்வதற்கான திட்டமொன்றை முன்னெடுக்கவேண்டும் என அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

காலநிலை மாற்றமே குடிதண்ணீர் தட்டுப்பாட்டிற்கான முக்கிய காரணமாக காணப்படும் என அவர் தெரிவித்தார்.

இலங்கையின் மழைவீழ்ச்சி காலங்களில் ஏற்கனவே மாற்றங்கள் தென்படத் தொடங்கிவிட்டன என அவர் குறிப்பிட்டார்.

வழமையாக வருடாந்தம் இலங்கையில் 2500 மில்லிலீற்றர் மழை பெய்யும் மே முதல் செப்ரெம்பர் வரையான காலப்பகுதியே அதிகளவு மழைக்காலம் என தெரிவித்துள்ள அவர், காலநிலை மாற்றம் காரணமாக மே மாதத்தில் மாத்திரம் 2500 மில்லிலீற்றர் மழை பெய்யலாம். நாங்கள் இதனை எதிர்கொள்ள தயாராகயிருக்கவேண்டும் என குறிப்பிட்டார்.

(அ)

# இலங்கை பிக்குவுக்கு எதிராக அவுஸ்திரேலியாவில் சிறுவர் பாலியல் துஷ்பிரயோகக் குற்றச்சாட்டுகள்!

கொழும்பு, ஓக. 19

மெல்பேர்னை சேர்ந்த பௌத்தமதகுரு ஒருவர் சிறுவர் பாலியல் துஷ்பிரயோக குற்றச்சாட்டுகள் தொடர்பில் நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ளார்.

1990 முதல் 2000 வரையிலான காலப்பகுதியில் சிறுவர் பாலியல் துஸ்பிரயோகங்களில் ஈடுபட்டார் என்ற குற்றச்சாட்டுகள் தொடர்பிலேயே பௌத்த மதகுரு நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ளார்.

மெல்பேர்னின் தென்கிழக்கில் உள்ள தம்ம சரண ஆலயத்தின் மடாதிபதியான நாவோடுன்ன விஜித நாணயக்கார தேரர் 16 வயதிற்குட்பட்டவர்களுடன் உடலுறவில் ஈடுபட்டது அநாகரீகமான விதத்தில் நடந்துகொண்டது உட்பட 13 குற்றச்சாட்டுகளை எதிர்கொண்டுள்ளார்.

பொலிஸார் இந்த வாரம் அவருக்கு எதிராக குற்றச்சாட்டுகளை சுமத்தினர். மூவர் பௌத்த மதகுருவிற்கு எதிராக முறைப்பாடு செய்ய முன்வந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவங்கள் 1996 முதல் 2004 வரையிலான காலப்பகுதியில் குறிப்பிட்ட மதகுரு கெய்ஸ் பொரோ ஆலயத்தில் இருந்த வேளை இடம்பெற்றுள்ளன.

தேரர் பல சிறுமிகளிடம் அநாகரீகமான விதத்தில் நடந்துகொண்டார் என பொலிஸ் விசாரணை பிரிவினர் தெரிவித்துள்ளமை நீதிமன்ற ஆவணங்கள் மூலம் தெரியவந்துள்ளது.

இந்த நிலையில் பௌத்தமதகுரு காவி உடையுடன் நேற்று வெள்ளிக்கிழமை நீதிமன்றத்தில் ஆஜராகியிருந்தார்.

(அ)

# வறட்சியால் 37,101 ஏக்கர் நெற்செய்கை பாதிப்பு!

கொழும்பு, ஓக. 19

நாட்டில் நிலவும் கடுமையாக வறட்சியான காலநிலையால் 37,101 ஏக்கர் நெற்பயிர்ச் செய்கை அழிவடைந்துள்ளதுடன், 32,967 விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

வறட்சியான காலநிலையால் குடிதண்ணீர் விநியோகம் பாதிக்கப்பட்டுள்ளதாக தேசிய நீர் விநியோக வடிகாலமைப்புச் சபை குறிப்பிட்டுள்ளது. தெற்கு, வடக்கு, வடமேல்,வடமத்திய உள்ளிட்ட மாகாணங்களில் குடிதண்ணீர் விநியோகம் பாதிக்கப்பட்டுள்ளது.

வறட்சியான காலநிலையால் சிறுபோக பயிர்ச்செய்கையில் 37,101 ஏக்கர் நெற்பயிர் செய்கை பாதிக்கப்பட்டுள்ளதுடன், 32,967 விவசாயிகள் பொருளாதார ரீதியிலும் தொழிற்றுறை ரீதியிலும் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

சிறுபோக பயிர்செய்கையில் நெற்பயிர்செய்கையில் ஈடுபட்ட விவசாயிகளில் குருநாகல் மாவட்டத்தைச் சேர்ந்த விவசாயிகளே அதிகளவில் பாதிக்கப்பட்டுள்ளனர். வறட்சியான காலநிலை, நீர் விடுவிப்பு தாமதம் ஆகிய பௌதீக மற்றும் மானிட காரணிகளால் குருநாகல் மாவட்டத்தில் 19,388 ஏக்கர் நெற்பயிர் செய்கை பாதிக்கப்பட்டுள்ளது. அத்துடன், உடவளவ வலயத்தில் 10,125 ஏக்கர் நெற்பயிர் செய்கை பாதிக்கப்பட்டுள்ளதுடன் 4,050 விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

நாட்டில் கடந்த ஒன்றரை மாதகாலமாக நிலவும் கடுமையான வரட்சியான காலநிலையால் விவசாய பயிர்செய்கைகளுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பை மதிப்பாய்வு செய்து விவசாயிகளுக்கு நட்டஈடு வழங்க விவசாயம் மற்றும் விவசாய சேவைகள் காப்புறுதிச் சபை 25 நிபுணர்களை உள்ளடக்கிய குழு ஒன்றை நியமித்துள்ளது.

(அ)

# நிலங்களை ஆக்கிரமிப்பதற்காக காடுகளுக்கு தீ மூட்டும் கும்பல்கள்!

கொழும்பு, ஓக. 19

நிலங்களை ஆக்கிரமிப்பதற்காக திட்டமிட்ட குழுக்கள் இந்த வருடம் மாத்திரம் 25000 ஏக்கர் வனங்களை தீக்கிரையாக்கியுள்ளன என சூழல் ஆர்வலர்கள் தெரிவித்துள்ளனர்.

தபோவ வனப்பகுதியில் 50 ஏக்கர் வனம் தீக்கிரையாக்கப்பட்டுள்ளதாக சூழல் ஆர்வலர்கள் தெரிவித்துள்ளனர்.

வறட்சியான காலப்பகுதியிலேயே இந்தக் குழுக்கள் காடுகளை தீக்கிரையாக்குகின்றன என நில மற்றும் விவசாய சீர்திருத்தத்திற்கான இயக்கத்தின் சஜீவ சாமிகர தெரிவித்துள்ளார்.

வலயங்களில் திட்டமிட்ட குழுக்கள் காடுகளுக்கு தீ மூட்டுகின்றன. அரசாங்கம் எடுத்துள்ள தவறான கொள்கைகளால் இவ்வாறான நடவடிக்கைகள் அதிகரித்துள்ளன எனவும் அவர் தெரிவித்தார்.

இந்த வருட ஆரம்பத்தில் அமைச்சர் பவித்திரா வன்னியாராச்சி, காடுகளில் உள்ள நிலங்களை 11 மாவட்டங்களைச் சேர்ந்த பொதுமக்களுக்கு வழங்குவதற்கான அமைச்சரவைப் பத்திரத்தை சமர்ப்பித்தார். ஆனால் இந்த நிலங்களை பல்வேறு தனியார் நிறுவனங்களுக்கு வழங்க அரசாங்கம் விரும்புகின்றது என தெரிவித்துள்ள சாமிகர, இதற்கான சூழ்நிலையை ஏற்படுத்த அரசாங்கம் முயல்கின்றது எனவும் கூறினார்.

அமைச்சரவை தீர்மானத்தின் பின்னரே காடுகள் தீப்பிடிக்கும் சம்பவங்கள் அதிகரித்துள்ளன எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

காடுகளுக்கு தீவைத்த 145 சம்பவங்கள் பெப்ரவரிக்கு பின்னர் இடம்பெற்றுள்ளன எனவும் அவர் தெரிவித்தார்.

(அ)

# இந்து - பௌத்த மதக் கலவரத்தை தடுக்க சட்ட நடவடிக்கை எடுங்கள்

## சரத் வீரசேகர நீதியமைச்சரிடம் வலியுறுத்தல்

கொழும்பு, ஓக. 19

**"குருந்தூர் மலை விவகாரத்தை அடிப்படையாகக் கொண்டு தோற்றம் பெறும் இன முரண்பாட்டை தடுக்க அரசாங்கம் உரிய நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என்பதை நீதியமைச்சரிடம் வலியுறுத்தியுள்ளேன். தொல்பொருள் மரபுரிமைகளை முன்னிலைப்படுத்தி தோற்றம் பெற்றுள்ள இருதரப்பு முரண்பாடுகள் குறித்து தேசிய பாதுகாப்பு தொடர்பான பாராளுமன்ற துறைசார் மேற்பார்வைக் குழுவில் ஆராய எதிர்பார்த்துள்ளேன்" என அக்குழுவின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான அட்மிரல் சரத் வீரசேகர தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்-

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் உள்ள பௌத்த மரபுரிமைகளை அழிப்பதற்கு ஒரு தரப்பினர் திட்டமிட்ட வகையில் செயற்படுகின்றனர்.

குருந்தூர் விகாரையில் உள்ள பௌத்த மத புராதன சின்னங்கள் தமிழ் அரசியல்வாதிகளின் ஆதரவுடன் அழிக்கப்பட்டுள்ளன.

குருந்தூர் மலையில் இந்து மத வழிபாடுகளில் ஈடுபடலாம் என முல்லைத்தீவு நீதிமன்ற நீதிபதி அனுமதி வழங்கியமை குறித்து நீதிச்சேவை ஆணைக்குழுவின் ஆலோசனைகளை பெற்றுக்கொள்ளவுள்ளோம்.

குருந்தூர் மலையில் மத வழிபாடுகளில் ஈடுபடும்போது முரண்பாடுகள் தோற்றம் பெற



லாம் என முல்லைத்தீவு பொலிஸார் நீதிமன்றத்துக்கு அறிக்கை சமர்ப்பித்துள்ளார்கள்.

குருந்தூர் மலையில் இந்து வழிபாடுகள் இன்று இடம்பெறவுள்ள நிலையில் கொழும்பில் இருந்து 500 இற்கும் அதிகமான சிங்களவர்கள் குருந்தூர் மலைக்குச் செல்ல உள்ளனர். இருதரப்பினருக்கும் இடையில் வாய்த்தர்க்கம் ஊடாக முரண்பாடுகள் தோற்றம் பெறலாம்.

குருந்தூர் மலை விவகாரத்தை அடிப்படையாகக் கொண்டு தோற்றம் பெறும் இன முரண்பாட்டை தடுக்க அரசாங்கம் உரிய நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என்பதை நீதியமைச்சரிடம் வலியுறுத்தியுள்ளேன்.

நாட்டில் இனங்களுக்கு இடையில் மீண்டும் இன முரண்பாட்டை தோற்றுவிக்க ஒரு தரப்பினர் முயற்சிக்கிறார்களா என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

வடக்கு-கிழக்கு மாகாணங்களில் தொல்பொருள் மரபுகளை முன்னிலைப்படுத்தி தோற்றம் பெற்றுள்ள முரண்பாடுகள் குறித்து தேசிய பாதுகாப்பு தொடர்பான பாராளுமன்ற துறைசார் மேற்பார்வைக் குழுவில் ஆராய எதிர்பார்த்துள்ளேன்-என்றார். (அ)

# பொலிஸ் அதிகாரம் மத்தியிடம் மாத்திரமே இருப்பது அவசியம்!

## நசீர் அஹமட் ஜனாதிபதிக்கு கடிதம்



கொழும்பு, ஓக. 19

சுற்றாடல் அமைச்சரும் முஸ்லிம் காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினருமான நசீர் அஹமட், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு 13 ஆவது அரசியலமைப்பு திருத்தம் தொடர்பாக கடிதமொன்றை அனுப்பி வைத்துள்ளார்.

இலங்கைவாழ் முஸ்லிம் மற்றும் சிங்கள சமூகங்களின் பங்கேற்பின்றி 13 ஆவது அரசியலமைப்பு திருத்தத்தை அமுல்படுத்துவதன் மூலமோ அல்லது வேறு நடவடிக்கை மூலமோ கொண்டுவரப்படும் எந்தத் தீர்வும் ஒரு போதுமே நீடித்த நிலைபேறான தீர்வாக அமையாது என அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் அதிகாரம் பரவலாக்கப்படுவதை முஸ்லிம் மக்கள் ஆதரிக்கின்ற போதிலும், 13 ஆவது திருத்தம் ஏனைய விடயங்களில் திருத்தப்படவேண்டும் என அவர் யோசனை முன்வைத்துள்ளார்.

மாகாணங்களை இணைப்பதற்கான தத்துவத்தினை அகற்றும் வகையில், அரசியலமைப்பின் உறுப்புரை 154 அ (03) நீக்கப்படவேண்டும் எனவும் அமைச்சர் நசீர் அஹமட் ஜனாதிபதிக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

சட்டம், ஒழுங்கு உள்ளிட்ட அனைத்து பொலிஸ் அதிகாரங்களும் பிரத்தியேகமாக மத்திய அரசாங்கத்திடம் மாத்திரமே ஒப்படைக்கப்பட வேண்டும் எனவும் அவரது கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)

# மலையக மக்களின் மனித உரிமைகளை பிரித்தானியா கண்காணிப்பது அவசியம்



கொழும்பு, ஓக. 19

200 வருடங்களுக்கு முன்னர் பிரித்தானியாவிலிருந்து இலங்கைக்கு அழைத்துவரப்பட்ட மலையக மக்கள், இலங்கையில் தற்போது அடிமை நிலையில் வாழ்வதாக தெரிவிக்கும் பிரபல மனித உரிமைகள் செயற்பாட்டாளர் ருக்கி பெர்னான்டோ, மலையக மக்களின் மனித உரிமை நிலைகளை தொடர்பில் கண்காணிக்க வேண்டிய பொறுப்பு பிரத்தானிய அரசாங்கத்துக்கே உள்ளதாகவும் தெரிவித்தார்.

குருநாகல் - பத்தலகொட தோட்டத்தில் எந்தவிதமான அடிப்படை வசதிகளுமின்றி வாழும் மலையக மக்களின் பிரச்னைகளை ஆராய்வதற்காக ஊடகவியலாளர்கள், சட்டத்தரணிகளுடன் இணைந்து ருக்கி பெர்னான்டோ நேரடி விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்தார்.

இது தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

குருநாகலில் உள்ள இறப்பர் தோட்டமான பத்தலகொட தோட்டத்தில் பரம்பரை பரம்பரையாக வாழும் மலையக தமிழ் மக்களின் நிலைமைகளைப் பார்க்கும்போது அதிர்ச்சியாகவும் கவலையாகவும் இருக்கிறது.

200 வருடங்களுக்கு முன்னர் இந்தியாவிலிருந்து இந்த மக்களை பலவந்தமாக பிரித்தானியர்கள் அடிமைகளாக இலங்கைக்கு அழைத்து வந்தார்கள்.

200 வருடங்களுக்குக் கடந்தும் இந்த மக்களின் நிலைமைகள் படுமோசமானதாகவே இருக்கிறது. மலையக மக்களின் வீட்டு நிலைமைகள் படுமோசமாக இருக்கிறது. சுகாதாரம் மற்றும் கல்வி சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்புகளும் மட்டுப்படுத்தப்பட்டவையாகவே இருக்கிறது.

மலையக மக்கள் பரம்பரை பரம்பரையாக இலங்கையில் வாழ்ந்து வந்தாலும் அவர்களுக்கு இன்னும் காணி உரிமை இல்லை. மலையக மக்களின் வாழ்க்கையை மேம்படுத்த இந்திய, இலங்கை அரசாங்கங்களும் அரச சார்பற்ற நிறுவனங்களும் முயற்சிக்கின்றன.

எனினும், காணி உரிமையை இவர்களுக்கு வழங்க வேண்டும் என்பதே இப்போது பிரதானமாக இருக்கிறது. மலையக மக்களுக்குக் காணி உரிமை இருந்தால் அவர்கள் இன்னும் அதிகமாக முன்னேறுவார்கள்.

மலையக மக்களை இந்தியாவிலிருந்து பிரித்தானியாவே இலங்கைக்கு அழைத்து வந்தது. இலங்கையில் தற்போது அவர்கள் அடிமைநிலையில் வாழ்ந்து வருகிறார்கள். எனவே, மலையக மக்களின் மனித உரிமை நிலைகளை தொடர்பில் கண்காணிக்க வேண்டிய பொறுப்பு பிரத்தானிய அரசாங்கத்துக்கே உள்ளது -என்றார். (அ)

# நம்பிக்கையில்லாப் பிரேரணையை ஆதரிக்குமாறு அனைத்து எம்.பிக்களுக்கும் வேலுகுமார் அழைப்பு

கொழும்பு, ஓக. 19

சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவாக வாக்களிக்கவுள்ளதாக கண்டி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வேலுகுமார் தெரிவித்தார்.

மக்கள் நலன்கருதி, பாராளுமன்றத்தில் உள்ள அனைவரும் இப்பிரேரணைக்கு ஆதரவளிக்க வேண்டும் எனவும், அவ்வாறு அல்லாவிட்டால் அது மக்களுக்கு இழைக்கும் துரோகமாகவே அமையும் எனவும் வேலுகுமார் எம்.பி. குறிப்பிட்டுள்ளார்.

சுகாதார அமைச்சர் கெஹலியவுக்கு எதிராக ஐக்கிய மக்கள் சக்தியால் முன்வைக்கப்பட்டுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணை செப்ரெம்பர் முதல் வாரத்தில் பாராளுமன்றத்தில் விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது. (அ)

# சிமெந்தின் விலை 700 ரூபாய் உயரும்?

கொழும்பு, ஓக. 19

சகல வரிகளையும் கழித்த பின்னர் சிமெந்தின் விற்பனை விலை, துறைமுகத்தில் இறக்கப்படும் சிமெந்தின் விலையை விட 700 ரூபாய் அதிகம் என்று பொது நிதிக்குழுவில் தெரியவந்துள்ளது.

இது தொடர்பில் அறிக்கையொன்றை வழங்குமாறும் நிதி அமைச்சு மற்றும், நகர அபிவிருத்தி மற்றும் நிர்மாணத்துறை அமைச்சின் அதிகாரிகளுக்கு அரசாங்க நிதி பற்றிய குழு அறிவுறுத்தல் வழங்கியுள்ளது.

அத்துடன், நகர அபிவிருத்தி அதிகார சபையினால் ஆரம்பிக்கப்பட்ட வீட்டுத் திட்டங்களில் குறைந்த வருமானம் பெறுவோருக்கான வீடுகள், நடுத்தர வருமானம் பெறுவோர்க்கான வீடுகள் உள்ளிட்ட பல்வேறு வீடுகளை அமைக்கும் பணிகள் முடங்கியுள்ளன.

இது தொடர்பிலும், கட்டுமானத் துறைக்கு ஏற்பட்டுள்ள பாதிப்புக் குறித்தும் அறிக்கையொன்றை சமர்ப்பிக்குமாறும் அந்த குழு வலியுறுத்தியதாக பாராளுமன்ற தொடர்பாடல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

முன்னதாக 12 இலட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட வீட்டை தற்போது, நிர்மாணிக்க சுமார் 24 இலட்சம் ரூபா தேவைப்படுவதாக அதிகாரிகள் சுட்டிக்காட்டினர்.

அரசாங்கத்தின் வருமானத்தை அதிகரிக்க நிதி அமைச்சின் ஊடாக மேற்கொள்ளப்பட்டு வரும், வரி அதிகரிப்புக்களின் போது ஏற்படுகின்ற சமூக ரீதியான பாதிப்புக்கள் குறித்து உரிய மதிப்பாய்வுகள் முன்னெடுக்கப்படாமை பாரிய பிரச்னையாகியுள்ளது.

அத்துடன், சிமெந்து விலையைக் கண்காணிப்பதற்கும், சம்பந்தப்பட்ட துறையில் தலையிட வேண்டியிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது. (அ)

# கொக்கெய்ன் போதைப்பொருளுடன் வெளிநாட்டுப் பிரஜை ஒருவர் கைது!

கொழும்பு, ஓக. 19

நாரஹேன்பிட்டி பகுதியில் உள்ள விடுதி ஒன்றில் 2 கோடி ரூபாவுக்கும் அதிக பெறுமதியான கொக்கெய்ன் போதைப்பொருளுடன் பிலிப்பைன்ஸ் நாட்டு பிரஜை ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பிரிவின் அதிகாரிகளுக்கு வழங்கப்பட்ட தகவலுக்கு அமைய, சுங்க பிரிவின் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவினருடன், இணைந்து முன்னெடுத்த சோதனையின்போது 2 கிலோவுக்கும் அதிகமான கொக்கெய்ன் போதைப்பொருளுடன், குறித்த நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த சந்தேகநபரிடமிருந்து, போதைப்பொருளை கொள்வனவு செய்வதற்காக வருகை தந்திருந்த நபர் ஒருவரும் 7 லட்சம் ரூபா பணத்துடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

கிருலப்பனை பிரதேசத்தை சேர்ந்த 49 வயதுடைய ஒருவரே கைது செய்யப்பட்டுள்ளார்.

வெளிநாட்டில் இருக்கும் ஒரு முக்கிய போதைப்பொருள் கடத்தல்காரரின் அறிவுறுத்தலின் பேரில், போதைப்பொருளை கொள்வனவு செய்வதற்காக அவர் குறித்த விடுதிக்கு சென்றுள்ளதாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. (அ)

# ஐ.தே.கவின் முகவராக செயல்படுகிறார் விக்கி

## கஜேந்திரன் எம்.பி. குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், ஒக. 19

**இந்தியாவின் தேவைக்காகவே 13 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்த முயற்சிகள் எடுக்கப்பட்டு இருக்கின்ற நிலையில் இந்தியாவை மகிழ்விக்கும் வகையிலேயே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் விக்னேஸ்வரன் தரப்பும் செயல்படுகின்றன என தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான செல்வராஜா கஜேந்திரன் குற்றச்சாட்டியுள்ளார்.**

**இவர்களின் ஏமாற்று நாடகங்களையும் துரோகத்தனத்தையும் எமது மக்கள் சரியான முறையில் புரிந்து கொள்ளவேண்டுமென்றும் அவர் கேட்டுள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்-

13 ஆவது திருத்தம் தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் விக்னேஸ்வரன் கலந்துரையாடல் ஒன்றை நடத்தி இருக்கிறார் எனவும் இதனை நடைமுறைப்படுத்துவதாக நம்பிக்கையும் வெளியிட்டு இருக்கின்றார் எனவும் விக்கினேஸ்வரன் கூறியிருக்கின்றார்.

ஆனால் எங்களைப் பொறுத்தவரையில் தமிழ் மக்களால் நீண்ட காலமாக நிராகரிக்கப்பட்டு வந்த ஒரு சட்டம் மூலமே 13 ஆவது திருத்தச் சட்டம். தமிழ் மக்களின் விருப்புக்கு மாறாக கொண்டுவரப்பட்டது. இருந்த போதும் தற்போது நடைமுறையில் உள்ள அந்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டும் என விக்கினேஸ்வரன் தரப்பும் கூட்டமைப்பும் கோருவது மக்களுக்காக அல்ல.

தமிழ் மக்களை ஏமாற்றுகின்ற துரோகத்தனமான ஒரு செயற்பாடாகவே நாங்கள் இதனைப் பார்க்கிறோம். இந்த விக்னேஸ்வரன் தரப்பும் கூட்டமைப்பு இன்று ஒரே கருத்துடன் ஒரே அணியாகவே செயல்படுகின்றனர்.

இந்த 13 ஆவது திருத்தத்தை தமிழ் மக்களுக்கான ஒரு தீர்வாகவோ தொடக்கப் புள்ளியாகவோ ஏற்றுக்கொள்ள நாம் தயாராக இல்லை.

இன்று நாடு பொருளாதார ரீதியாக பாதாளத்தில் இருக்கும் நிலைமையில் சர்வதேச தரப்பை நாங்கள் சரியான முறையில் கையாள வேண்டும். இந்த நேரத்தில் எங்களுக்கான தீர்வு சமஷ்டி அடிப்படையிலானது என்று சொல்லி அந்த சமஷ்டித்



தீர்வைப் பெறுவதற்கு நாம் சர்வதேச அழுத்தங்களைக் கொடுக்கவேண்டும்.

அதற்கு மாறாக 13 ஆவது திருத்தத்தைக் கேட்டு அரசாங்கத்தை நெருக்கடியில் இருந்து விடுவிப்பதற்கு துணை போவது என்பது எமது மக்களுக்கு இழைக்கப்படும் மாபெரும் துரோகம்.

இந்த நிலைமை தொடர்வது தமிழர்களின் எதிர்காலம் பலியிடப்படும் செயற்பாடாகவே இது அமையும்.

இந்தியாவின் தேவைக்காக, இந்திய -,மேற்கு நாடுகளின் முகவராக உள்ள ரணிலை அடுத்த தேர்தரிலும் வெல்ல வைப்பதற்கான முயற்சி நடைபெறுகின்ற இடத்தில் அவரை சிங்கள மக்கள் மத்தியில் நல்லவராக, வல்லவராக காட்டுவதற்கான முயற்சியில் விக்கினேஸ்வரன் ஈடுபட்டுள்ளார்.

தமிழ் மக்கள் நம்பி வாக்களித்தபோதும் அந்த நம்பிக்கையிற்கு மாறாக செயற்படுகிற விக்கினேஸ்வரன் போன்றவர்கள் உண்மையில் ஒரு நம்பிக்கை துரோகி. அவரெல்லாம் அடுத்த தேர்தலில் வெல்லப் போவதில்லை. இப்போது வெற்றி பெற வாக்களித்த மக்களே எதிர்வரும் தேர்தல்களில் அவரைத் தோற்கடிப்பார்கள்.

சிங்கள மக்களாலே நிராகரிக்கப்பட்ட கட்சியாக இருக்கின்ற ஐக்கிய தேசியக் கட்சியினை கட்டி எழுப்புவதற்கும் அதனோடு சேர்ந்த ஆதரவு கட்சிகளையும் வளர்ப்பதற்கான முயற்சியாக இத்தகைய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

அந்தக் கட்சிகளை வளர்ப்பதற்கான ஒரு பிரசாரத் தளமாகவே இந்த மாகாண சபை முறை தொடர்பில் பேசப்படுகிறது.

இந்த செயற்பாடு முழுக்க முழுக்க ஐக்கிய தேசியக் கட்சியை கட்டியெழுப்பப்புவதாகவே அமையும். அந்தக் கட்சியின் மறை முக முகவராகவே இங்கே விக்னேஸ்வரன் செயற்பட்டு கொண்டிருக்கிறார் என்பதையும் மக்கள் புரிந்து கொள்ளவேண்டும்.

ஆகவே விக்கினேஸ்வரனின் இந்த நயவஞ்சக துரோகத்தனங்களில் எமது மக்கள் சிக்கிக் கொள்ளக் கூடாது. விக்கி போன்ற நயவஞ்சகத் துரோகிகளை தமிழ் மக்கள் முற்றாக இனம் கண்டு நிராகரிக்கவேண்டும்-என்றார்.

(அ)



# இலங்கையுடன் வியட்நாம் பொருளாதார ஒத்துழைப்பு

கொழும்பு, ஒக. 19

வியட்நாம் மற்றும் இலங்கைக்கு இடையிலான பொருளாதார உறவுகளை பலப்படுத்துவதும் மற்றும் விமான சேவைகளை அதிகரிப்பது தொடர்பில் பிரதமர் தினேஸ் குணவர்தனவுக்கும் வியட்நாம் பிரதி பிரதமர் லூ குவாங்க்கு இடையில் நடைபெற்ற பேச்சுவார்த்தையில் இணக்கப்பாடுகள் எட்டப்பட்டுள்ளன.

பிரதமர் தினேஷ் குணவர்தன தலைமையிலான இலங்கையின் உயர்மட்ட குழு சீனாவின் யுனான் மாகாணத்தில் உள்ள குன்மிங்கில் நடைபெற்றுவரும் 7ஆவது சீனா-தெற்காசிய எக்ஸ்போ கண்காட்சியில் பங்குபற்ற சென்றுள்ளனர்.

இந்த விஜயத்தில் பிரதமர் சீனாவின் முக்கிய அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகளுடன் கலந்துரையாடல்களை நடத்தியுள்ளதுடன், வெளிநாட்டு தலைவர்களுடனான சந்திப்பின் ஒரு அங்கமாக வியட்நாம் பிரதி பிரதமரை சந்தித்துள்ளார்.

இந்தச் சந்திப்பில் இருதரப்பு பொருளாதார, கலாசார மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டுள்ளது.

பொது மற்றும் தனியார் துறைகளில் தற்போதுள்ள கூட்டு முயற்சிகளுக்கு மேலதிகமாக புதிய வர்த்தகம் மற்றும் முதலீடுகளின் சாத்தியக்கூறுகளை இலங்கை ஆராய வேண்டும் என வியட்நாம் பிரிதி பிரதமர் கோரிக்கை விடுத்ததுடன், வியட்நாம் பாரிய அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுத்துள்ளதுடன், தொழில் வல்லுநர்கள் மற்றும் திறமையான இலங்கைத் தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்புகள் கிடைக்கும் எனவும் உறுதியளித்தார்.

விவசாயத்தில் ஏற்றுமதி ஒத்துழைப்பை விரிவுபடுத்துவது குறித்து வியட்நாம் பிரதிப் பிரதமருடன் பிரதமர் தினேஷ் குணவர்தன கலந்துரையாடிய துடன், இறப்பர், தேங்காய், தேயிலை, மீன்பிடி, எரிசக்தி மற்றும் சுரங்கப் பணிகள் குறித்தும் சிறப்பு கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

இரு நாடுகளுக்கும் இடையிலான விமானங்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதன் ஊடாக சுற்றுலாப் பயணிகளின் வருகையை அதிகரிக்கும் எனக் கூறிய பிரதமர், பௌத்த மத வழிபாட்டுத் தலங்களுக்கு சுற்றுலாவை மேம்படுத்துவதற்கு வியட்நாம் ஒத்துழைக்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்தார். (அ)

# வேகமான பொருளாதார வீழ்ச்சி நோக்கி செல்கின்றது இலங்கை!

## சம்பிக்க ரணவக்க எச்சரிக்கை

கொழும்பு, ஒக. 19

"நாட்டின் பொருளாதாரம் மீண்டும் வேகமாக வீழ்ச்சியடையும். 90 பில்லியன் டொலர்களாக இருந்த நாட்டின் பொருளாதாரம் தற்போது 80 பில்லியனை விடவும் குறைந்துள்ளது. இதனால், நாடு படிப்படியாக பின்னோக்கி செல்லும். பொய்யான பொருளாதார இலக்கங்களை கூறும் வாய் பேச்சு வீரர்கள் மீண்டும் வரலாம்."

-இவ்வாறு எச்சரித்துள்ளார் பாட்டாலி சம்பிக்க ரணவக்க.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

2023 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் நாட்டின் பொருளாதாரம் 2022 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 11.5 வீதமாக குறைந்துள்ளது. இது மிகவும் பயங்கரமான நிலைமை.

நல்லாட்சி அரசாங்கம் ஆட்



சிக்கு வந்த பின்னர், மகிந்த அரசாங்கம் முன்னெடுத்த பொருளாதார நிலைமை வீழ்ச்சியடைந்ததாக 2019 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலின் போது, நிபுணர்கள் என்று கூறிக்கொண்ட வியத் மக அமைப்பில் இருந்தவர்கள் தெரிவித்தனர்.

7 வீதமாக இருந்த பொருளாதார வளர்ச்சி வேகத்தை 3 வீதமாக குறைத்ததாக கூறினர். கோட்டாபயவை கொண்டு வந்து மீண்டும் 7 வீத பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்துவோம் என்றும் கூறினர். இதுவே அவர்கள் நாட்டு மக்களை ஏமாற்ற நாடு முழுவதும் முன்னெடுத்த பிரசாரம்.

இறுதியில் என்ன நடந்துள்ளது. 7 வீத பொருளாதார வளர்ச்சியும் இல்லை. நல்லாட்சி அரசாங்கத்தின் காலத்தில் இருந்த 3 வீத பொருளாதார வளர்ச்சி வேகம் கூட மகிந்த அரசாங்கத்தின் காலத்தில் இருக்கவில்லை. 11.5 என்ற எதிர்மறையான பொருளாதார வளர்ச்சி வேகமே இருந்துள்ளது.

பொய்யான பொருளாதார இலக்கங்களை கூறும் வாய் பேச்சு வீரர்கள் மீண்டும் வரலாம்.

எந்த வேலைகளையும் செய்யாத, முன்னேற்றங்களை காண்பிக்காதவர்கள் பொருளாதார விற்பன்னர்கள் போல் வந்து உரைகளை நிகழ்த்தலாம்.

இது குறித்து கவனமாக இருக்குமாறு நாங்கள் மக்களை கேட்டுக்கொள்கிறோம்-என்றார்.

# வங்குரோத்து நிலையிலிருந்து மீட்க பொருளாதார அபிவிருத்தி அவசியம்

## கூறுகிறார் சஜித் பிரேமதாஸ

கொழும்பு, ஒக. 19

நாட்டை வங்குரோத்து நிலையில் இருந்து மீட்டெடுக்க பொருளாதார அபிவிருத்தி அவசியம் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

அதற்காக கைத்தொழில்களை மேம்படுத்த வேண்டும் எனவும் நேற்று வரத்தகர்களுடன் பாராளுமன்றத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போது, எதிர்க்கட்சித் தலைவர் குறிப்பிட்டார்.

சிறு, நடுத்தர மற்றும் பாரியளவான கைத்தொழிலை மேம்படுத்தவேண்டும். அத்துடன், ஊழல் மற்றும் கையூட்டலை ஒழிக்க வேண்டும்.

இந்தநிலையில், நாட்டை வங்குரோத்து நிலைக்கு கொண்டு வந்தவர்களை நீதிக்கு முன் நிறுத்த வேண்டும் என எதிர்க்கட்சி தலைவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

(அ)

# பாகிஸ்தான்:
## குர்ஆன் அவமதிப்பு குற்றச்சாட்டில் சிக்கிய கிறிஸ்தவ இளைஞர்கள் - தேவாலயங்கள் மீது தாக்குதல்!

குர்ஆன் அவமதிக்கப்பட்டதாக எழுந்துள்ள சர்ச்சையைத் தொடர்ந்து, பாகிஸ்தானின் ஃபைசலாபாத் பகுதியில் வன்முறை வெடித்துள்ளது.

ஃபைசலாபாத்தின் ஜரன்வாலா தாலுகாவுக்கு உட்பட்ட பகுதியில் ஒரு கிறிஸ்தவ குடியிருப்பைப் போராட்டக்காரர்கள் அடித்து நொறுக்கினர். தேவாலயம் ஒன்றுக்கும் தீ வைத்த அவர்கள், சில அரசு கட்டடங்களையும் அடித்து நொறுக்கினர்.

அதிகாரிகளின் கூற்றுப்படி, எஸ்சா நாக்ரி என்ற பகுதியில் கிறிஸ்தவ இளைஞர்கள் சிலரால் குர்ஆன் அவமதிக்கப்பட்டதாக சமூக ஊடகங்களில் தகவல் பரவத் தொடங்கியது. இதையடுத்து காலை முதல் அங்கு போராட்டங்கள் வெடித்தன.

ஜரன்வாலா நகர காவல் உதவி ஆணையர் ஷௌகத் மசிஹ் தொலைபேசியில் கூறும்போது, “இன்று காலை 8 மணி முதல் 9 மணி வரை, எஸ்சா நாக்ரியில் போராட்டத்தில் இறங்கிய ஒரு கும்பல் தீவைப்பு சம்பவத்திலும் ஈடுபட்டதாக உள்ளூர் காவல்துறை அதிகாரிகளுக்கு தகவல் கிடைத்துள்ளது,” என்று அவர் தெரிவித்தார்.

கைகளில் உருட்டுக் கட்டை உள்ளிட்டவற்றை ஏந்தியிருந்த போராட்டக்காரர்கள் காவல் நிலைய அலுவலகத்தை அடித்து நொறுக்கியதாகவும் ஷௌகத் மசிஹ் கூறினார்.



“வெளியில் என்ன நடக்கிறது என்று எங்களுக்குத் தெரியவில்லை. எங்கள் அலுவலகத்துக்குள் வைத்து நாங்கள் பூட்டப்பட்டோம்,” என்று எஸ்சா நாக்ரி நகர துணை காவல் ஆணையர் அலுவலகத்தைச் சேர்ந்த மற்றொரு அதிகாரி தெரிவித்தார்.

அலுவலகத்தின் ஜன்னல் கண்ணாடிகளையும் போராட்டக்காரர்கள் அடைத்து உடைத்தனர் என்றும் அந்த அதிகாரி கூறினார்.

நகரில் பதற்றமான சூழல் நிலவி வருவதாகவும், நிலைமையை கட்டுக்குள் கொண்டு வர முயன்று வருவதாகவும் காவல்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

**இருவர் மீது வழக்குப் பதிவு**

இதனிடையே, குர்ஆனை அவமதித்த குற்றச்சாட்டின் பேரில், கிறிஸ்தவ இளைஞர்கள் இருவர் மீது ஜரன்வாலா நகர போலீசார் வழக்குப் பதிவு செய்துள்ளனர்.

எஸ்சா நகரியில் குர்ஆன் நூலின் பக்கங்களில் சிவப்பு







மை நிரப்பப்பட்ட பேனாவால் அவதூறான வார்த்தைகள் எழுதப்பட்டிருந்ததாக, புகார் அளித்தவர்கள் தெரிவித்திருந்தனர். அத்துடன் அவர்கள் இந்தச் செயலில் ஈடுபட்டவர்களாகக் கருதிய நபர்களைப் பிடிக்க முயன்றதாகவும், ஆனால் அவர்கள் தப்பி ஓடிவிட்டனர் எனவும் புகார் மனுவில் தெரிவித்திருந்தனர்.

இதனிடையே, ‘குர்ஆனை நிந்தனை செய்ததாக குற்றம் சாட்டப்பட்டுள்ளவர்கள் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது. அவர்களைக் கைது செய்வதற்கான நடவடிக்கைகளிலும் போலீசார் தீவிரமாக இறங்கியுள்ளனர்’ என்று ஃபைசலாபாத் போலீசார் வெளியிட்டுள்ள ட்விட்டர் பதிவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே ’பொதுமக்கள் யாரும் சட்டத்தைக் கையில் எடுக்க வேண்டாம் எனவும், விரும்பத்தகாத செயல்களில்



ஈடுபடுவதை மக்கள் தவிர்க்க வேண்டும்’ எனவும் அந்த ட்விட்டர் பதிவில் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

**ஆயர் வருத்தம்**

இந்தச் சம்பவம் குறித்து பாகிஸ்தான் தேவாலயங்களின் தலைவரான ஆயர் ஆசாத் மார்ஷல் தனது வருத்தத்தைத் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள ட்விட்டர் பதிவில், “ஜரன்வாலாவில் உள்ள கிறிஸ்தவ சமூகம் துன்புறுத்தப்பட்டுள்ளது. ஒரு தேவாலய கட்டடம் எரிக்கப்பட்டுள்ளது. பைபிளும் அவமதிக்கப்பட்டுள்ளது,” என்று ஆயர் தனது ட்விட்டர் பதிவில் தெரிவித்துள்ளார்.

மேலும், “சட்டத்தை அமல்படுத்துபவர்களிடம் இருந்து நாங்கள் நீதியையும், நீதக்கான செயல்களையும் எதிர்பார்த்து அழுது கொண்டிருக்கிறோம்,” என்றும் அவர் தனது பதிவில் கூறியுள்ளார்.

**கராச்சியில் கண்டன ஆர்ப்பாட்டம்**

ஜரன்வாலாவில் கிறிஸ்தவ சமூகத்தினர் மீது நடத்தப்பட்ட தாக்குதலை கண்டித்து, கராச்சியில் உள்ள கிறிஸ்தவர்கள் மற்றும் பல்வேறு சமூக அமைப்பினர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

அங்குள்ள பத்திரிகையாளர்கள் மன்றத்துக்கு வெளியே நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றவர்கள், கிறிஸ்தவர்களுக்கு எதிரான சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டு தண்டிக்கப்பட வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளனர்.

பாகிஸ்தானில் பஞ்சாப் மாகாணத்துக்கு அடுத்தப்படியாக, கராச்சியில் கிறிஸ்தவ சமூகத்தினர் அதிகம் வசிக்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

கிறிஸ்தவர்கள் மீதான தாக்குதல் சம்பவங்கள் குறித்து பேசிய ஆர்வலர் ஒருவர், ‘ஒரு குற்றச்சாட்டின் அடிப்ப




டையில் இந்தச் சம்பவங்கள் எல்லாம் நிகழ்ந்துள்ளன.

குற்றச்சாட்டுகள் எழுந்ததும், அவை குறித்து எந்த விசாரணையும் மேற்கொள்ளாமல், எவ்வித ஆதாரமும் திரட்டாமல், தேவாலயங்கள், பைபிள்களை எரிக்க ஆரமபித்துவிட்டனர்,” என்று அவர் வேதனையுடன் தெரிவித்தார்.

கிறிஸ்தவ சமூக மக்களின் வீடுகளும் எரிக்கப்பட்டுள்ளன. தங்களது வீடுகளில் பாதுகாப்பு இல்லை என்பதை உணர்ந்த மக்கள், பாதுகாப்பான இடங்களை நோக்கிள சென்று கொண்டிருக்கின்றனர் என்றும் அவர் கூறினார்.

**பாகிஸ்தானை இந்தியாவாக மாற்றுவது ஏன்? - மதபோதகர் கேள்வி**

மத போதகரான கஜாலா ஷபீக் கூறும்போது, “கிறிஸ்தவ வழிபாட்டுத் தலங்கள் பாதுகாப்பாக இல்லை. சொல்லப் போனால் இப்போது இங்கு எதுவும் பாதுகாப்பாக இல்லை. பாகிஸ்தானையும் இந்தியாவாக மாற்றுவது ஏன்?

மத நிந்தனைச் சட்டங்கள் துஷ்பிரயோகம் செய்யப்படுவது நிறுத்தப்பட வேண்டும் என்று கோரி வருகிறோம்,” என்று கண்ணீர் மல்க தெரிவித்தார்.

சமுக ஆர்வலரான சபீர் மைக்கேல் என்பவர் கூறும்போது, ‘தற்போது நிகழ்ந்துள்ள சம்பவங்களுக்கு அரசு நிர்வாகத்தின் எதிர்வினை மிகவும் தாமதமாக உள்ளது. தேவாலயங்கள் எரிக்கப்பட்ட சம்பவம் குறித்து உரிய விசாரணை மேற்கொள்ளப்பட்டு, இந்த வன்முறைகளில் ஈடுபட்டவர்களைக் கைது செய்து அவர்களை கடுமையாகத் தண்டிக்க வேண்டும்,” என்று அவர் வலியுறுத்தினார்.

**கராச்சியில் பலத்த பாதுகாப்பு**

ஃபைசலாபாத்தில் நிகழ்ந்துள்ள வன்முறை சம்பவங்களைத் தொடர்ந்து, பாகிஸ்தானின் மிகப்பெரிய மற்றும் துறைமுக நகரமான கராச்சியில் போலீசாரின் பாதுகாப்பு பலபடுத்தப்பட்டுள்ளது.

“கராச்சி நகரில் உள்ள அனைத்து தேவாலயங்கள், கோவில்கள், மசூதிகள், இமாம் பர்காக்கள் மற்றும் அவற்றைச் சுற்றியுள்ள பகுதிகளில் பாதுகாப்பு நடவடிக்கைகளை கடுமையாக்கவும், உளவுத்துறை நடவடிக்கைகளை அதிகரிக்கவும் கராச்சி காவல்துறை கூடுதல் ஐஜி ஜாவேத் ஆலம் ஒது உத்தரவு பிறப்பித்துள்ளார்,” என்று காவல்துறை செய்தித் தொடர்பாளர் தெரிவித்துள்ளார். ●

# பிரபாகரனின் மனைவி, மகள் உயிருடன் உள்ளதாக வெளியான வீடியோ - மறுக்கும் இலங்கை அரசு

ரஞ்சன் அருண் பிரசாத்

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் உயிருடன் உள்ளார் என்ற விஷயம் அண்மையில் பேசுபொருளாக மாறியது. அந்தப் பேச்சு தனிந்துள்ள நிலையில், தற்போது அவரது மனைவி மதிவதனியும் மகள் துவாரகாவும் உயிருடன் உள்ளதாகக் கூறப்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் மனைவி மதிவதனியின் சகோதரி எனத் தன்னை அடையாளப்படுத்திக் கொள்ளும் பெண் ஒருவர் இந்த விஷயத்தைத் தெரிவித்துள்ளார்.

சமூக ஊடகங்களின் மூலம் வீடியோ ஒன்றை வெளியிட்டு, அவர் இந்தத் தகவலைக் கூறியுள்ளமை தற்போது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.



**பிரபாகனின் மனைவி, மகள் குறித்த வீடியோவில் கூறப்பட்டது என்ன?**

“கடந்த 2009ஆம் ஆண்டு நடந்த போரின் காரணமாக எனது தங்கை மதிவதனி, மகள் துவாரகா மற்றும் உறவினர்கள் இறந்துவிட்டதாக இலங்கை அரசாங்கத்தால் அறிவிக்கப்பட்டு, ஊடகத்தில் செய்திகளை அறிந்துக்கொண்டேன்.





கடந்த சில தினங்களாக அவர்கள் உயிருடன் இருப்பதாகக் கூறி வருவதையும் செய்திகளில் அறிந்துகொண்டேன். பிறகு அவர்களை நேரில் சந்தித்து உரையாடி அவர்களுடன் உணவருந்தி விட்டு வந்துள்ளேன்.

இந்த செய்தியை மிகவும் மகிழ்ச்சியுடன் எனது உறவினர்களுக்கும், நண்பர்களுக்கும் தெரிவிக்கின்றேன். உண்மையில் இந்தச் செய்தியை கடவுள் கொடுத்த கொடையாகவே நினைக்கின்றேன். நன்றி வணக்கம்!” என மதிவதனியின் சகோதரி என அடையாளப்படுத்திக் கொள்ளும் பெண் கூறியுள்ளார்.

**இலங்கை உள்நாட்டுப் போரின் இறுதிக்கட்டம்**

இலங்கையில் முப்பது ஆண்டுக் காலமாக நடந்த உள்நாட்டுப் போர், 2009ஆம் ஆண்டு மே மாதம் 19ஆம் தேதி முடிவுக்கு கொண்டு வரப்பட்டதாக இலங்கை அரசாங்கம் அதிகாரபூர்வமாக அறிவித்திருந்தது.

இந்த நிலையில், இறுதிக்கட்ட போரின்போது விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் மற்றும் அவரது உறவினர்கள் உயிரிழந்ததாகவும் இலங்கை அரசாங்கத்தால் அறிவிக்கப்பட்டது.

இவ்வாறான பின்னணியில், போர் முடிவடைந்து 14 ஆண்டுகள் கடந்துள்ள நிலையில், பிரபாகரன் மற்றும் அவரது உறவினர்கள் உயிருடன் உள்ளார்கள் எனப் பல செய்திகள் வெளிவருகின்றன.

வேலுப்பிள்ளை பிரபாகரனின் மனைவி மற்றும் மகள் உயிருடன் உள்ளதாக வெளியான செய்தி போலியானது என்று பாதுகாப்பு அமைச்சகத்தின் ஊடகப் பேச்சாளர் கேணல் நலின் ஹேரத் தெரிவித்தார்.

“இதுவொரு நாடகம். தமது கவனத்தை ஈர்ப்பதற்காக இதுபோன்ற செயல்களைச் செய்கின்றார்கள். இது நகைச்சுவையான விஷயம்,” என பாதுகாப்பு அமைச்சின் ஊடகப் பேச்சாளர் கேணல் நலின் ஹேரத் குறிப்பிட்டார்.

**பிரபாகரன் உயிருடன் உள்ளாரா?**

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் உயிருடன் உள்ளார் என்று உலகத் தமிழர் பேரமைப்பின் தலைவர் பழ. நெடுமாறன் கடந்த பிப்ரவரி மாதம் ஊடக சந்திப்பொன்றை ஏற்பாடு செய்து கருத்து தெரிவித்திருந்தார்.

இந்தக் கருத்தானது அந்த சந்தர்ப்பத்தில் பேசுபொருளாக மாறியது. எனினும், வேலுப்பிள்ளை பிரபாகரன் இறுதிக்கட்ட போரின்போது உயிரிழந்ததாக இலங்கை அரசாங்கம் அறிவித்தது.

“கடந்த 2009ஆம் ஆண்டு நடந்த இறுதிக்கட்ட யுத்தத்தில் பிரபாகரன் கொல்லப்பட்டார். டீ.என்.ஏ ஆதாரங்களையும் நாம் எடுத்துள்ளோம். 2009ஆம் ஆண்டு மே மாதம் 18ஆம் தேதி இறுதிக்கட்ட போரில் அவர் கொல்லப்பட்டார்.

குறித்த தேதியில் பிரபாகரன் உயிரிழந்தமைக்கான டி.என்.ஏ பரிசோதனை உள்ளிட்ட அனைத்து ஆதாரங்களையும் எடுத்துள்ளோம். போலியான தகவல்களை அவர்கள் வெளியிடுகின்றார்கள்,” என இலங்கை ராணுவ ஊடகப் பேச்சாளர் பிரிகேடியர் ரவி ஹேரத் கடந்த பிப்ரவரி மாதம் 13ஆம் தேதி தெரிவித்திருந்தார்.

**பிரபாகரனின் டி.என்.ஏ அறிக்கையை வெளியிட மறுத்த இலங்கை பாதுகாப்பு அமைச்சகம்**

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் பிரேத பரிசோதனை அறிக்கையை வழங்குவதில் சிக்கல் நிலை காணப்படுவதாக இலங்கை பாதுகாப்பு அமைச்சகம் அறிவித்துள்ளது.

பிரபாகரனின் மரண பரிசோதனை அறிக்கையை வழங்குவது, நாட்டின் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலானது என இலங்கை பாதுகாப்பு அமைச்சகம் பதிலளித்துள்ளது.

விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் இறுதிப் போரில் கொல்லப்பட்டதாக இலங்கை அரசாங்கத்தால் அறிவிக்கப்பட்ட போதிலும், அதற்கான எந்த வித ஆதாரங்களையும் இலங்கை அரசாங்கம் இதுவரை வெளியிடவில்லை.

இந்த நிலையில், விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் உயிருடன் உள்ளார் என ஒரு தரப்பினர் கூறி வருகின்ற நிலையில், அவர் உயிரிழந்துவிட்டதாக மற்றுமொரு தரப்பு கருத்துகளை முன்வைத்து வருகின்றது.

இவ்வாறான கருத்துகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் வகையில், இலங்கை ஊடகவியலாளர் மிதுன் ஜயவர்தனவினால், தகவலறியும் உரிமை சட்டத்தின் கீழ், பாதுகாப்பு அமைச்சகத்திடம் பிரபாகரனின் மரண பரிசோதனை அறிக்கை கோரப்பட்டுள்ளது.

**பிரபாகரனின் பிரேத பரிசோதனை அறிக்கையை வெளியிட மறுப்பது ஏன்?**

பிரபாகரனின் டி.என்.ஏ பரிசோதனை அறிக்கை, மரண பரிசோதனை அறிக்கை ஆகியவற்றை இலங்கை அரசாங்கம் வெளியிடாத பின்னணியிலேயே இந்தக் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

இந்த நிலையிலேயே, அந்த அறிக்கையை வழங்க இலங்கை அரசாங்கம் மறுத்துள்ளது.

எனினும், விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் இறுதிக்கட்ட போரில் உயிரிழந்துவிட்டதாக இலங்கை அரசாங்கம் அறிவித்துள்ளது.

தேசிய பாதுகாப்பிற்கு பாதிப்பை ஏற்படுத்தும் என்பதாலேயே, இந்தத் தகவல்களை வழங்க முடியாதுள்ளது என்று பாதுகாப்பு அமைச்சகத்தின் ஊடகப் பணிப்பாளரும், ஊடகப் பேச்சாளருமான கேணல் நலின் ஹேரத் ஜூன் மாதம் 22ஆம் தேதி தெரிவித்திருந்தார்.

“நாம் இதை உறுதி செய்துள்ளோம். இது பிரபாகரனின் உடல் என்பதை கருணா அம்மான், தயா மாஸ்டர் ஆகிய இருவரும் உறுதிப்படுத்தினார்கள். டி.என்.ஏ பரிசோதனையை நாம் முன்னெடுத்துள்ளோம்,” என அவர் கூறினார்.

“டி.என்.ஏ அறிக்கை உள்ளிட்ட தகவல்களை அனைவரும் அறிந்துகொள்ள வேண்டியதில்லை. அவர் உயிரிழந்ததை பாதுகாப்பு அமைச்சகம் உறுதிப்படுத்தியுள்ளது. அப்படியென்றால், அது உறுதியாகின்றது,” என்று பாதுகாப்பு அமைச்சகத்தின் ஊடகப் பணிப்பாளரும், ஊடகப் பேச்சாளருமான கேணல் நலின் ஹேரத் அளித்த பதிலில் தெரிவித்தார்.

(பிபிசி)

# தண்ணீர் தரம் தொடர்ந்து பரிசோதிக்கப்படுகின்றது!

கொழும்பு, ஓக. 18

நீரின் தரம் குறைந்துள்ளதால், குடிதண்ணீரை வழங்குவதற்காக நீர் சுத்திகரிப்பு செய்யும்போது நீரின் தரம் தொடர்ந்தும் பரிசோதிக்கப்படுவதாக தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை தெரிவித்துள்ளது.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துக்கொண்டு கருத்துரைத்த அந்த சபையின் பிரதிச் செயலாளர் அனோஜா களுஆராய்ச்சி இதனைத் தெரிவித்தார்.

தற்போதைய வறட்சியான காலநிலை காரணமாக குடி தண்ணீரின் தேவையும் அதிகரித்துள்ளதாக அவர் குறிப் பிட்டார்.

இதேவேளை, நேற்று முதல் 6 மாத காலத்திற்கு 100 மெகா



வோட் மின்சாரத்தை கொள்வனவு செய்வதற்கு பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு நேற்று முன் தினம் இலங்கை மின்சார சபைக்கு அனுமதி வழங்கியுள்ளது.

2009 ஆம் ஆண்டு 20 ஆம் இலக்க இலங்கை மின்சார சட்டத்தின் 43ஆவது பிரிவின் கீழ் 6 மாத காலத்திற்கு மாத்திரம் மின்சாரத்தை கொள்வனவு செய்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

3 நிபந்தனைகளின் கீழ் உரிய அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அதன்படி உரிய மின்சாரம் கொள்முதல் தகுதியின் அடிப்படையில் மேற்கொள்ளப்படவேண்டும்.

ஒப்பந்தக் காலத்தின் முடிவில் மின்சார கொள்வனவு தொடர்பாக சுயாதீன கணக்காய்வு அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

அத்துடன், கொத்மலை - பொல்பிட்டிய 220 கிலோ வோட் மின்கட்டமைப்பு அடுத்த வருடம் ஓகஸ்ட் மாதம் 31ஆம் திகதிக்கு முன்னர் செயற்படுத்தப்படவேண்டும் என்பதுடன் இந்த மின்சாரம் குறைந்த செலவின் அடிப் படையில் கொள்வனவு செய்யப்படவேண்டும் என்பதே குறித்த நிபந்தனைகளாகும். (அ)

# தடை செய்யப்பட்ட சவுக்கு சுறா மீனை தம்வசம் வைத்திருந்த சந்தேக நபர் கைது!

மீன்பிடித்துறையில் மீனவர்களால் பிடிக்கத் தடை செய்யப்பட்ட சவுக்கு சுறா (கசமோறா ) மீன்கள் 33 கிலோவை தன்வசம் வைத்திருந்த சந்தேக நபரை கடற்படையினர் கைது செய்து திருகோணமலை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தினர்.

தனது தவறை ஒப்புக்கொண்ட சந்தேக நபருக்கு திருகோணமலை பிரதான நீதிபதி இஸ்மாயில் பயாஸ் றஸாக் 10,000 ரூபா தண்டப்பணம் செலுத்துமாறு உத்தரவிட்டார்.

சாம்பல் தீவு,சல்லிய பிரதேசத்திலுள்ள மீன் வாடியில் வைத்தே மீன்களுடன் இந்த சந்தேக நபர் கைது செய்யப்பட்டார். (அ)

# தான்தோன்றீஸ்வரர் மகோற்சவம் இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பம்

மட்டக்களப்பு, ஓக 19

கொக்கட்டிச்சோலை சிறீ தான்தோன்றிஸ்வரர் ஆலய வருடாந்த மகோற்சவம் இன்று சனிக்கிழமை அதிகாலை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ச்சியாக ஆலய திருவிழாக்கள், குடித்திருவிழாக்கள் நடைபெற்று 03.09.2023ஆம் திகதி மாலை 4.00மணிக்கு தேரோட்டம் நடைபெறவுள்ளது. அன்றிரவு முனைக்காடு வீரபத்திரர் ஆலய முன்றில் திருவேட்டை திருவிழாவும் மறுநாள் காலை தீர்த்தோற்சவமும் இடம்பெற்று ஆலய மகோற்சவம் நிறைவு பெறவுள்ளது. (அ)

# வைத்தியர்கள் மீளச் சேவைக்கு திரும்பினால் அவசியமான சகல வசதிகளும் வழங்கப்படும்!

கொழும்பு, ஓக. 19

ஓய்வு பெற்ற விசேட வைத்தியர்கள் மீண்டும் சேவைக்கு திரும்புவார்களாயின் அவர்களுக்கு அவசியமான சகல வசதிகளையும் வழங்க சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது.

தூரப் பிரதேசங்களில் பணியாற்றும் வைத்தியர்களுக்கான உத்தியோகபூர்வ வாசஸ்தலம் வைத்தியசாலைகளிலேயே வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் வைத்தியர் ஜி விஜேசூரிய தெரிவித்துள்ளார்.

வைத்தியசாலைகளில் வைத்தியர்களுக்கான உத்தியோகபூர்வ வாசஸ்தலம் இல்லாத இடங்களில் வாடகை அடிப்படையிலேனும் வைத்தியர்களுக்கான வாசஸ்தலங்களை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் கூறியுள்ளார்.

அதேநேரம், இந்தியா உள்ளிட்ட வெளிநாடுகளைச் சேர்ந்த வைத்தியர்கள் நாட்டின் வைத்தியசாலைகளில் பணியாற்றவுள்ளதாக வெளியாகும் தகவல் உண்மைக்கு புறம்பானது என்றும் அவர் குறிப்பிட்டார்.

அவ்வாறான எந்தவித தீர்மானமும் எட்டப்படவில்லை என்றும் பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் வைத்தியர் ஜி.விஜேசூரிய கூறினார். (அ)

# தாதியர் சேவையில் 30 ஆயிரம் வெற்றிடம்

கொழும்பு, ஓக. 19

தாதியர் சேவையில் 30 ஆயிரத்துக்கும் அதிகமான வெற்றிடங்கள் நிலவுகின்றன அகில இலங்கை தாதியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் மெதவத்த தெரிவித்துள்ளார்.

தாதியர்களை பயிற்சியில் இணைத்துக்கொள்வதில் நிலவும் தாமதத்தால் பெரிய நெருக்கடி ஏற்பட்டுள்ளதாக தாதியர் தொழில்சங்கம் தெரிவித்துள்ளது.

மூன்று வருடங்களாக உயர் மட்ட தாதியர்கள் பயிற்சிக்கு உள்வாங்கப்படவில்லை என்று அவர் சுட்டிக்காட்டினார்.

இதன் காரணமாக மூன்று வருடங்களுக்குள் மருத்துவமனையின் செயல்பாட்டில் கடுமையான பாதிப்புகள் ஏற்படக்கூடும் என அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இந்நிலையில், தாதியர் பயிற்சிக்கான ஆட்சேர்ப்பை துரிதப்படுத்துமாறு சுகாதார அமைச்சு பணிப்புரை விடுத்துள்ளது. (ஐ)






# மலைநீலியம்மன் ஆலயத்தின் காணிகளை விடுவிக்கவேண்டும்

## அப்பகுதி மக்கள் கோரிக்கை





திருமலை, ஓக. 19

**தொல்லியல் திணைக்களத்தினால் கையகப்படுத்தப்பட்டு புத்தவிகாரை அமைக்கப்பட்டுவரும் மலைநீலியம்மன் ஆலயத்திற்குரிய காணிகளை விடுவிக்குமாறு மக்கள் கோரிக்கை விடுத்து வருகின்றனர்.**

**வெருகல் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கல்லடி பகுதியில் அமைந்துள்ள மலைநீலி அம்மன் ஆலயத்தின் காணிகள் தொல்லியலுக்குரியபகுதியாக அடையாளப்படுத்தப்பட்டு, கையகப்படுத்தப்பட்டிருந்த நிலையில் அது பௌத்தத்திற்குரிய பகுதியாக உரிமைகோரி அப்பகுதியில் விகாரை அமைக்கப்பட்டு பௌத்த மயமாக்கப்பட்டு வருகின்றது.**

2006ஆம் ஆண்டு அப்பகுதியில் நிலவிய யுத்த சூழ்நிலை காரணமாக அப்பகுதி மக்கள் இடம்பெயர்ந்து மட்டக்களப்பு உட்பட பல்வேறு இடங்களில் தஞ்சமடைந்தார்கள். இதன்போது 1835ஆம் ஆண்டுக்கு முற்பட்ட பழமையான வரலாற்றைக் கொண்ட மலைநீலி அம்மன் ஆலயமானது விமானத்தாக்குதலினால் சேதத்திற்கு உள்ளாக்கப்பட்டிருந்தது.

இடம்பெயர்ந்த மக்கள் மீண்டும் 2007ஆம் ஆண்டு மீள குடியமர்ந்தபோது குறித்த ஆலயம் இராணுவத்தினால் ஆக்கிரமிக்கப்பட்டு ஆலயத்தின் இடிபாடுகள் அகற்றப்பட்ட நிலையில் தொல்லியலுக்குரிய இடமாகவும் கையகப்படுத்தப்பட்டு அம்மனின் விக்கிரகம் வீதியில் போடப்பட்டிருந்தது. இவ்வாறான நிலையில் 2009ஆம் ஆண்டு பௌத்த பிக்குகளினால் இவ் ஆலயமானது பௌத்தத்திற்குரியது எனக்கூறி ஆக்கிரமிக்கப்பட்டிருப்பதோடு வெளி இடங்களில் இருந்து பாரிய கற்களை கொண்டுவந்து பல கட்டுமானங்களும் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அத்துடன் கிராம மக்கள் காலாகாலமாக நெற்செய்கையை மேற்கொண்டுவந்த ஆலயத்தைச் சூழவுள்ள 50 ஏக்கருக்கு மேற்பட்ட வயற்காணிகளும் பறிமுதல் செய்யப்பட்டு மக்களுடைய வாழ்வாதாரமும் இல்லாதொழிக்கப்பட் டுள்ளதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

தொல்லியலுக்குரிய இடமாக அடையாளப்படுத்தப்பட்டுள்ள குறித்த ஆலய வளாகத்தினுள் பிக்குகளின் கட்டுமானங்களுக்கான அனுமதியை வழங்கி பாராபட்சமான முறையில் தொல்லியல் திணைக்களம் செயற்படுவதாகவும் அப்பகுதி மக்கள் குற்றம் சுமத்தி வருவதோடு நீண்டகாலமாக வீதியோரத்தில் இருக்கின்ற தமது ஆலயத்தை குறித்த காணிக்குள் வைத்து வழிபட அனுமதி வழங்குமாறு கோரிக்கை விடுக்கின்றனர். (அ)

# 13ஆவது திருத்தம் வேண்டாம் மட்டக்களப்பில் ஆர்ப்பாட்டம்

மட்டக்களப்பு, ஓக. 19

முஸ்லீம்களின் காணிகளை பராமரிப்பதற்கு தடையாக இருப்பவர்கள், முஸ்லீம்களின் கச்சைத் துணிகளைக்கூட உருவிவிட்டு அனுப்பக்கூடிய வாய்ப்புக்கள் அதிகம் இருப்பதால் 13ஆவது திருத்தச் சட்டத்தை அமுல்படுத்தவேண்டாம் என்று மட்டக்களப்பு மாவட்டத்தின் ஓட்டமாவடி, நாவலடி பிரதேசத்தில் கடந்த புதன்கிழமை ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

13ஆவது திருத்தச் சட்டம் அமுல்படுத்தப்படுமாக இருந்தால் முஸ்லீம் மக்களுக்கு கிடைக்கக்கூடிய உரிமைகளை பெற்றுத் தருவார்கள் என்று எதிர்பார்ப்பு நிராசையாக போய்விட்டதாகவும் ஆர்ப்பாட்டக்காரர்கள் குறிப்பிட்டனர்.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் போன்ற அரசியல்வாதிகள் இன்று களத்தில் இறங்கி, இனவாதத்துடன் 25 ஏக்கர் தனியார் காணியை மகாவலி காணி என்றும் அரச காணி என்றும் அடையாளப்படுத்தியுள்ளனர்.

முஸ்லீம்களின் காணிகளை பராமரிப்பதற்கு தடையாக இருப்பவர்கள் 13ஆவது சட்டம் அமுலுக்கு வருகின்றபோது மட்டக்களப்பு மாவட்டத்தில் இருக்கின்ற முஸ்லீம்களின் துணிகளைகூட உருவிவிட்டு அனுப்பக்கூடிய வாய்ப்புக்கள் அதிகம் இருப்பதால், நாங்கள் இந்த சட்டம் திருத்துவதை அனுமதிக்க மாட்டோம் என்று ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டோர் தெரிவித்தனர். (அ)

# பட்டிருப்பு வலய விளையாட்டு விழா



மட்டக்களப்பு, ஓக. 19

பட்டிருப்பு வலய விளையாட்டு விழா வலயக்கல்விப் பணிப்பாளர் எஸ்.சிறிதரன் தலைமையில் செட்டிபாளையம் பொது விளையாட்டு மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

விழாவில் பிரதம விருந்தினராக கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் ஜி. திசாநாயக்க கலந்து சிறப்பித்தார்.

சம்மாந்துறை வலயக்கல்விப் பணிப்பாளர் உமர் மௌலானா திருக்கோவில் வலயக்கல்விப் பணிப்பாளர் ஆர். உதயகுமார் மற்றும் கிழக்கு மாகாண உடற்கல்வி பிரதிக்கல்விப் பணிப்பாளரும் கலந்து சிறப்பித்தனர். (அ)

# பெரிய கல்லாறு உதயபுரம் வித்தியாலயத்தில் கண்காட்சி




மட்டக்களப்பு, ஓக. 19

பட்டிருப்பு கல்வி வலயத்திற்குட்பட்ட பெரிய கல்லாறு உதயபுரம் தமிழ் வித்தியாலயத்தில் பாடசாலையின் அதிபர் சசிகாந்தன் தலைமையில் வரலாறு பாட கண்காட்சி நேற்று முன் தினம் வியாழக்கிழமை இடம்பெற்றது .

தரம் 6 தொடக்கம் 11 வரையான மாணவர்களின் வரலாறு பாட இயக்கங்களை சிறப்பாக வடிவமைத்து கொண்டு வந்தனர்.

இந்த நிகழ்வில் பாடசாலையின் முன்னாள் அதிபர் சசிதரன், பாடசாலை பிரதி அதிபர் சுதாகரன், பாடசாலையின் அபிவிருத்தி சங்க செயலாளர் கணேசலிங்கம், மற்றும் ஆசிரியர்களும் கலந்துகொண்டனர்.

இக் கண்காட்சியை சிறப்பாக ஒழுங்கமைத்த விஞ்ஞான பாட இணைப்பாளர் திருமதி சிவநேசன் கயல்விழி ஆசிரியர், பாட ஆசிரியர்களை அதிதிகள் பாராட்டினர். (அ)

# கல்முனை பிராந்திய மீனவர்களுக்கு புதிய தொலைத்தொடர்பு நிலையம்

## பைசால் காசிம் எம்.பி. நடவடிக்கை

மட்டக்களப்பு, ஓக. 19

கல்முனைப் பிராந்திய ஆழ்கடல் மீனவர்களின் நலன் கருதி தொலைத் தொடர்பு நிலையம் ஒன்றை அமைப்பதற்கான வேலைத் திட்டத்தை அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பொருளாளருமான பைசால் காசிம் மேற்கொண்டு வருகின்றார்.

2010 - 2014 ஆம் ஆண்டு காலப்பகுதியில் கடற்றொழில் அமைச்சராக ராஜித சேனாரத்ன எம்.பி. பதவி வகித்தபோது சாய்ந்தமருது பிரதேசத்தில் தொலைத்தொடர்பு நிலையமொன்று அமைக்கப்பட்டது. எனினும் அது சிறிது காலத்தில் மட்டக்களப்பு மாவட்டத்தின் வாழைச்சேனைப் பகுதிக்கு மாற்றப்பட்டுள்ளதாக பைசால் காசிம் எம்.பி. அண்மையில் பாராளுமன்றத்தில் சுட்டிக்காட்டியிருந்தார்.

இதனைத் தொடர்ந்து கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மற்றும் பைசால் காசிம் எம்.பி. ஆகியோர் சந்தித்து இவ்விடயம் தொடர்பில் கலந்துரையாடியிருந்தனர்.

இதையடுத்து இவர்கள் இருவருமாக கல்முனை பிராந்திய மீன்பிடித் திணைக்கள உதவிப் பணிப்பாளர் எஸ். ஸ்ரீரஞ்சனுடன் மேற்கொண்ட தொலைபேசிக் கலந்துரையாடலின் போது கல்முனைப் பிராந்தியத்தை மையப்படுத்தி தொலைத்தொடர்பு நிலையம் ஒன்றை அமைப்பதற்கான திட்ட அறிக்கைகளை உடனடியாக சமர்ப்பிக்குமாறு அமைச்சர் டக்ளஸ் பணிப்புரை விடுத்துள்ளார்.

ஆழ்கடலுக்கு மீன்பிடிக்கச் செல்லும் மீனவர்களுக்கு தொலைத்தொடர்பு வசதி மிகவும் முக்கியத்துவமிக்க சாதனமாக கருதப்படுகிறது. ஆழ்கடல் மீனவர்களுடனான தொடர்பாடல்களுக்கும் கடலில் ஏற்படுகின்ற அனர்த்தங்களின் போது உயிரிழப்புக்களையும் படகு உள்ளிட்ட பொருள் சேதங்களையும் தவிர்த்து, பாதுகாப்பாக கரை திரும்புவதற்கும் தொலைத்தொடர்பு நிலையமே முக்கிய பங்காற்றுகிறது.

இவ்வாறு மிகவும் அவசியத் தேவையாக இருந்து வருகின்ற தொலைத்தொடர்பு நிலையம் இப்பிராந்தியத்தில் இல்லாதிருக்கும் குறைபாட்டை நிவர்த்தி செய்வதற்காக நடவடிக்கை எடுத்துள்ள பாராளுமன்ற உறுப்பினர் பைசால் காசிம் அவர்களுக்கு கல்முனைப் பிராந்திய மீனவர்கள் நன்றியையும் பாராட்டையும் தெரிவித்துள்ளனர்.

# விபத்துக்கு முன்னர் தாயிடம் விமானி தெரிவித்த கருத்து!

கோலாலம்ப்பூர், ஓக. 19

**மலேசியாவின் மத்திய செலான்கூர் மாநிலத்தில் சிறியரக விமானம் ஒன்று நேற்று முன் தினம் விபத்துக்குள்ளானதில் 10 பேர் பலியாகினர்.**

**இந்த விபத்துக்கு சில மணி நேரங்களுக்கு முன்னர் விமானி ஒருவர் இறுதியாக தெரிவித்த கருத்து அனைவரையும் நெகிழ்ச்சியில் ஆழ்த்தியுள்ளது.**

**விமானத்தின் விமானியாக ஷரூல் கமல் என்பவர் செயற்பட்டுள்ளார்.**






விமானம் புறப்படுவதற்கு முன்னதாக தனது தாயுடன் சில நிமிடங்கள் உரையாடியுள்ளார்.

இதன்போது வழமைக்கு மாறாக அம்மாவுடன் அதிக அன்புடன் உரையாடியதாகவும், தாயுடன் நீண்ட காலம் வசிக்க விரும்புவதாகவும் தனது கருத்துக்களை பகிர்ந்துக்கொண்டுள்ளார்.

இவ்வாறிருக்க விமானத்திற்கு செல்வதற்கு முன்னர் ஐ லவ் யு சோ மச் மமா என தெரிவித்து விட்டு சென்றுள்ளார்.

குறித்த விமானியின் தாய் அன்பு அனைவரையும் நெகிழச் செய்துள்ளதுடன் கண்ணீர் சிந்தவும் வைத்துள்ளது.

இந்த நிலையில் குறித்த விமானத்தில் பயணித்த 8 பேரும் விமானம் விபத்துக்குள்ளான பகுதியில் இருந்த இருவருமாக 10 பேர் பலியானதாக தெரிவிக்கப்படுகிறது.

விமானத்தில் இரண்டு விமானிகளும் 6 பயணிகளும் பயணித்துள்ளனர்.

அதேநேரம் விமானம் விபத்துக்குள்ளானமைக்கான காரணம் இதுவரையில் கண்டறியப்படவில்லை.

சம்பவம் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக மலேசியாவின் சிவில் விமானப் போக்குவரத்து ஆணைக் குழு தெரிவித்துள்ளது.

(அ)

# அமெ. பிரஜைக்கு மரண தண்டனை நிறைவேற்றியது சவூதி அரேபியா!

ரியாத், ஓக. 19

சவுதி அரேபியாவில் தந்தையை தாக்கி கொலை செய்த அமெரிக்க நபருக்கு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அமெரிக்கரான பிஷாய் ஷெரீப் நஜி நசீப் என்பவருக்கே கடந்த புதன்கிழமையன்று சவுதி அரேபியாவின் தலைநகர் ரியாத்தில் வைத்து மரண தண்டனை நிறைவேற்றப்பட்டது.

இது தொடர்பில் சவுதி அரேபியாவின் உள்விவகார அமைச்சகம் அறிக்கை ஒன்றினை வெளியிட்டுள்ளது.

அவ்வறிக்கையில், பிஷாய் ஷெரீப் நஜி நசீப் போதைப்பொருள் பயன்படுத்தி வந்துள்ளார். தனது எகிப்திய தந்தையை அடித்து துன்புறுத்தி கழுத்தை நெரித்து கொன்றுள்ளார். பின்னர் இறந்த தந்தையின் உடலை துண்டு துண்டுகளாக வெட்டியுள்ளார். இவர் கைத செய்யப்படுவதற்கு முன்னர் பிரிதொரு நபரை கொலை செய்ய முயற்சித்துள்ளார் என குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, பிஷாய் ஷெரீப் நஜி நசீபுக்கு எவ்வாறு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டது. மேலும் நசீபுக்கு அமெரிக்காவில் குடியிருப்பு முகவரி உள்ளதா மற்றும் அவரது வயது உட்பட எந்த தகவலையும் சவுதி நிர்வாகம் வெளியிடவில்லை.

மேலும் சவுதி அரேபியாவில் கொடூர குற்றத்திற்காக வழங்கப்படும் மரண தண்டனை என்பது தலையை வெட்டி தண்டனையை நிறைவேற்றுவதேயாகும்.

2022 இல் சீனா மற்றும் ஈரானுக்கு அடுத்தப்படியாக அதிக மரணதண்டனையை நிறைவேற்றப்பட்ட நாடுகளில் சவுதி அரேபியா மூன்றாவது இடத்தில் உள்ளது.

2015 இற்கு பின்னர் இதுவரையில் 1,000 இற்கும் மேற்பட்ட மரண தண்டனைகள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

சவுதியில் கடந்த காலங்களில் வருடாந்திர மரணதண்டனை விகிதம் இரு மடங்காக அதிகரித்துள்ளது. 2021இல் 69 மரண தண்டனைகள் நிறைவேற்றப்பட்டன. இந்த எண்ணிக்கை கடந்த ஆண்டு 147 ஆக உயர்ந்துள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.

(அ)

# இந்திய முஸ்லிம்கள் சகலரும் மதம் மாறிய இந்துக்களேதான்!

புதுடில்லி, ஓக. 19

ஜம்மு காஷ்மீரின் முன்னாள் முதல்வர் குலாம் நபி ஆசாத், இந்தியாவில் உள்ள மதங்களின் வரலாற்று பின்னணியில் தனது கருத்துகளால் மீண்டும் விவாதத்தை ஏற்படுத்தியுள்ளார். இது குறித்த வீடியோ பல்வேறு சமூக ஊடக தளங்களில் பரவி வருகிறது.

குறித்த வீடியோவில், "இந்த தேசத்தில் உள்ள அனைவரும் ஆரம்பத்தில் இந்து மதத்துடன் தொடர்புடையவர்களே" எனக் குறிப்பிட்டுள்ளார்.

தோடா மாவட்டத்தின் தாத்ரி பகுதியில் ஒரு கூட்டத்தில் உரையாற்றிய ஆசாத், "சுமார் 1,500 ஆண்டுகளுக்கு முன்பு, இஸ்லாம் தோன்றியது, அதே சமயம் இந்து மதம் மிகவும் பழமையான வேர்களைக் கொண்டுள்ளது. சில முஸ்லிம்கள் வெளி நாடுகளில் இருந்து இடம்பெயர்ந்து முகலாய இராணுவத்தில் பங்கேற்றிருக்கலாம். இதன் விளைவாக, இந்து மதத்திலிருந்து மதமாற்றம் இஸ்லாம் இந்தியத் துணைக்கண்டத்தில் தோன்றியது."

"ஒரு குறிப்பிடத்தக்க நிகழ்வை காஷ்மீரில் அவதானிக்க முடியும், அங்கு ஆறு நூற்றாண்டுகளுக்கு முன்னர் காஷ்மீரி பண்டிட்டுகள் பெரும்பான்மையாக இருந்தனர், இஸ்லாத்திற்கு கணிசமான மதமாற்றம் நடைபெறுவதற்கு முன்பு இந்து மதம்,

இந்து, முஸ்லீம், ராஜ்புத், பிராமணர், தலித், காஷ்மீரி அல்லது குஜ்ஜார் என அடையாளம் காணப்பட்டாலும், எங்கள் பொதுவான தோற்றம் இந்த மண்ணுடன் நம்மை இணைக்கிறது. நமது மூதாதையர் தொடர்புகள் இங்கு ஆழமாக பதிந்துள்ளன, மேலும் இந்த மண்ணுக்குத் தான் இந்த வாழ்க்கையைத் தாண்டி நாம் திரும்புவோம். ," என்று ஆசாத்தின் வைரல் பேச்சில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

# டொனால்ட் ட்ரம்புக்கு விசம் கலந்த கடிதங்களை அனுப்பியுள்ள பெண்!





நியூயோர்க், ஓக. 19

டொனால்டு ட்ரம்ப் அமெரிக்க ஜனாதிபதியாக இருந்த போது அவரை கொல்லும் நோக்கில் விஷம் கலந்த கடிதங்களை அனுப்பிய பெண்ணுக்கு 22 ஆண்டுகள் சிறை தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

அதன்படி 56 வயதான பாஸ்கல் என்ற பெண்ணிற்கு 252 மாதங்கள் தண்டனை விதித்து நீதிபதி நேற்று உத்தரவிட்டார்.

தண்டனைக் காலம் முடிந்த பிறகு அவர் அமெரிக்காவிலிருந்து நாடு கடத்தப்படுவார்.

தண்டனை பெற்ற அவர் கனடா மற்றும் பிரான்ஸ் குடியுரிமைகளை கொண்ட பெண்ணாவார்.

டொனால்டு டிரம்ப் பெயரில் குறித்த பெண் அனுப்பிய உயிரைக் கொல்லும் கடிதங்கள் வெள்ளை மாளிகைக்கு அனுப்பி வைக்கப்படும் முன்னர் அதிகாரிகளால் கைப்பற்றப்பட்டது.

2020 செப்ரெம்பர் மாதம் நடந்த இச்சம்பவம் தொடர்பில் பாஸ்கல் தெரிவிக்கையில், "எனது திட்டம் தோல்வியடைந்ததில் வருந்துகிறேன், டொனால்டு டிரம்ப்பை தடுக்க முடியவில்லை.

எனது இலக்குகளை அடைய அமைதியான வழிகளைக் கண்டறிய விரும்புகிறேன்" என தெரிவித்திருந்தார்.

கடந்த 2020 இல் பாஸ்கல் கைதான போது, அவரிடமிருந்து ஒரு துப்பாக்கி, கத்தி மற்றும் தோட்டாக்கள் கைப்பற்றப்பட்டன.

விசாரணையில், கனடாவின் கியூபெக்கில் உள்ள தனது குடியிருப்பில் வைத்து விசத்தை தயாரித்ததாக அவர் ஒப்புக் கொண்டது குறிப்பிடத்தக்கது.

(அ)



# கனடாவின் வடக்கில் காட்டு தீயினால் ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் பாதிப்பு!

ஒட்டாவா, ஓக. 19

கனடாவின் வடக்கில் உள்ள மிகப்பெரிய நகரங்களில் ஒன்றான யெல்லோவ்நைஃப் பகுதியில் ஏற்பட்ட காட்டுத்தீயினால் ஆயிரக்கணக்கான மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

குறித்த பகுதியை விட்டு வெளியேறியுள்ள ஆயிரக்கணக்கான மக்கள், உள்ளூர் விமான நிலையத்திலும் நகருக்கு வெளியே உள்ள வீதிகளில், குவிந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

நூற்றுக்கணக்கானோர் அவசர இராணுவ வெளியேற்ற விமானங்களுக்காக அணிவகுத்துள்ளதாக சர்வதேச ஊடக தகவல்கள் தெரிவிக்கின்றன.

வடமேற்கு பிரதேசங்களில் உள்ள யெல்லோவ்நைஃப் பகுதியில் வசிக்கும் 20 ஆயிரம் பேரை அங்கிருந்து வெளியேறுமாறு நேற்றிரவு அதிகாரிகள் அறிவுறுத்தியிருந்தனர்.

நேற்றைய தினம் வரை, குறித்த நகரத்திலிருந்து 16 கிலோ மீற்றர் தொலைவில் காட்டுத்தீ பரவியுள்ளது.

சுமார் 240 காட்டுத்தீ சம்பவங்கள் அங்கு பதிவாகியுள்ளதுடன் அங்கு அவசரகால நிலைமை அறிவிக்கப்பட்டுள்ளது.

(அ)

# உலகக் கிண்ணத்தில் இந்தியா அரையிறுதிக்கு முன்னேறும்!





மும்பை, ஒக. 19

ஒருநாள் உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடரில் அரையிறுதிக்கு முன்னேறும் 4 அணிகளில் ஒன்றாக நிச்சயம் இந்தியா இருக்கும் என முன்னாள் தென்னாபிரிக்க அணி வீரர் ஏபி டிவில்லியர்ஸ் தெரிவித்துள்ளார்.

இந்தியாவில் வரும் ஒக்ரோபர் 5ஆம் திகதி முதல் நவம்பர் 19ஆம் திகதி வரை 50 ஓவர் உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடர் நடைபெறவுள்ளது.

இந்தத் தொடரில் போட்டியை நடத்தும் இந்தியா, இங்கிலாந்து, அவுஸ்திரேலியா, நியூசிலாந்து, பாகிஸ்தான், தென்னாபிரிக்கா, இலங்கை, பங்களாதேஷ், ஆப்கானிஸ்தான், நெதர்லாந்து உள்ளிட்ட 10 அணிகள் விளையாடவுள்ளன. இந்தத் தொடரில் பங்கேற்கவுள்ள உலக நாடுகளை சேர்ந்த அணிகள் அதற்கு ஆயத்தமாகி வருகின்றன. இந்தச் சூழலில் அரையிறுதிக்கு முன்னேறும் வாய்ப்பு கொண்டுள்ள நான்கு அணிகளை கணித்துள்ளார் டிவில்லியர்ஸ். தனது யூ-ரியூப் சனலில் அவர் இதனை தெரிவித்துள்ளார்.

"நிச்சயம் இந்தியா அரையிறுதிக்கு முன்னேறும். இந்த முறை அவர்கள் சம்பியன் பட்டம் வெல்லும் வாய்ப்புக்கூட உள்ளது. உலகக்கிண்ணத் தொடரின் கதை மிகவும் விசித்திரமானது. இந்தியா, இங்கிலாந்து, அவுஸ்திரேலியா ஆகிய அணிகள் அரையிறுதிக்கு முன்னேறி இருக்கும். நான்காவது அணியாக தென்னாபிரிக்கா இணைய வாய்ப்புள்ளது. பாகிஸ்தானும் முன்னேறலாம். ஆனால், நான் தென்னாபிரிக்கா செல்லும் என நம்புகிறேன். திறமையான வீரர்கள் அணியில் உள்ளனர்.

நான் ஆசிய கண்டத்தை சாராத 3 அணிகளை தெரிவு செய்துள்ளேன். அது கொஞ்சம் கடினம்தான். இருந்தாலும் எனது முடிவில் நான் உறுதியாக உள்ளேன். ஏனென்றால், இந்தியாவில் ஆடுகளங்கள் அருமையானவையாக இருக்கும் என்ற நம்பிக்கைதான். மோசமான விக்கெட்டை இந்தத் தொடரில் நாம் பார்க்க முடியாது. இந்தியா மற்றும் இங்கிலாந்து அணிகள் இறுதிப் போட்டியில் பலப்பரீட்சை செய்ய வாய்ப்புள்ளது" - என்று கூறியுள்ளார். (ஐ)



## அமெரிக்க ஓப்பன் ரென்னிஸ் வோஸ்னியாக்கி நேரடி தகுதி!

நியூயோர்க், ஒக. 19

ஆண்டின் கடைசி கிராண்ட் ஸ்லாம் தொடரான அமெரிக்க ஓப்பன் ரென்னிஸ் தொடர் நியூயோர்க் நகரில் வரும் 28ஆம் திகதி தொடங்குகிறது.

இந்த தொடரில் மகளிர் ஒற்றையர் பிரிவில் முன்னாள் முதல் நிலை வீராங்கனையான டென்மார்க்கின் கரோலின் வோஸ்னியாக்கி, அமெரிக்காவின் வீனஸ் வில்லியம்ஸ் ஆகியோருக்கு நேரடி வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

33 வயதான வோஸ்னியாக்கி கடந்த 2020ஆம் ஆண்டு நடைபெற்ற அவுஸ்திரேலிய ஓப்பன் தொடருடன் ஓய்வு பெற்றிருந்தார். 2 குழந்தைகளுக்கு தாயான நிலையில் கடந்த மாதம் அவர் மீண்டும் சர்வதேச ரென்னிஸ் போட்டியில் களமிறங்கினார்.

2018ஆம் ஆண்டு அவுஸ்திரேலிய ஓப்பனில் சம்பியன் பட்டம் வென்றுள்ள வோஸ்னியாக்கி 2009 மற்றும் 2014ஆம் ஆண்டு அமெரிக்க ஓப்பனில் 2ஆவது இடம் பிடித்திருந்தார். அமெரிக்க ஓப்பனில் இரு முறை பட்டம் வென்றுள்ள 43 வயதான வீனஸ் வில்லியம்ஸ் 24ஆவது முறையாக தற்போது களமிறங்கவுள்ளார். (ஐ)

## லீக்ஸ் கிண்ணம் வெல்ல மெஸ்ஸிக்கு வாய்ப்பு!



மியாமி, ஒக. 19

உதைந்தாட்ட உலகின் நட்சத்திர ஆட்டக்காரர்களில் ஒருவரான மெஸ்ஸி மேலும் ஒரு கிண்ணத்தை வெல்லும் வாய்ப்பை பெற்றுள்ளார். அது இன்ரர் மியாமி கழக அணிக்காக வெல்வதாக இருக்கும்.

கடந்த 12 மாதங்களில் உலகக் கிண்ணம், தங்கப் பந்து விருது மற்றும் பி. எஸ். ஜி. அணிக்காக 51 கோல் பங்களிப்பு (30 கோல்கள், 21 பங்களிப்புகள்) என அட்டகாசமாக ஆடுகளத்தை அதகளப்படுத்தி வருகிறார் லயனல் மெஸ்ஸி. தற்போது இன்ரர் மியாமி கழக அணிக்காக 9 கோல்களை லீக்ஸ் கிண்ணத் தொடரில் இதுவரை பதிவு செய்துள்ளார்.

அவர் விளையாடிய அனைத்து போட்டிகளிலும் கிண்ணம் வென்றுள்ளார். உலகக் கிண்ணம் உட்பட மொத்தம் 43 கிண்ணங்களை அவர் வென்றுள்ளார். 36 வயதான அவர் பலோன் டி ஓர் விருதை 7 முறை வென்று சாதனை படைத்துள்ளார். சிறந்த கால்பந்தாட்ட வீரருக்கு ஆண்டுதோறும் வழங்கப்படும் விருது இது.

நாஷ்வில் கழக அணிக்கு எதிராக இன்ரர் மியாமி அணி லீக்ஸ் கிண்ணத்தின் இறுதிப் போட்டியில் விளையாடுகிறது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# எல். பி. எல். இறுதிக்கு தம்புள்ளை அணி தகுதி



கொழும்பு, ஒக. 19

எல். பி. எல். தொடரின் இறுதிப் போட்டிக்கு தம்புள்ளை ஔரா அணி முன்னேறியுள்ளது.

காலி ரைட்டன்ஸ் அணிக்கு எதிராக 6 விக்கெட்களால் வெற்றி பெற்றதன் மூலம் தம்புள்ளை ஔரா இந்த சாதனையை படைத்துள்ளது.

பிரேமதாஸ மைதானத்தில் கடந்த நேற்று முன்தினம் இரவு நடந்த போட்டியில் காலி அணி 147 ஓட்டங்களை தம்புள்ளைக்கு இலக்காக நிர்ணயித்தது.

இதை விரட்டிய தம்புள்ளை ஔரா சார்பாக அவிஷ்க பெர்னாண்டோவும் அணித் தலைவர் குசல் மெண்டிஸும் 22 பந்துகளில் 33 ஓட்டங்களைப் பகிர்ந்து நல்ல ஆரம்பத்தை இட்டுக்கொடுத்தனர்.

அவிஷ்க பெர்னாண்டோ (24) ஆட்டமிழந்த பின்னர் குசல் மெண்டிஸ், சதீர சமரவிக்ரம (13) ஆகிய இருவரும் 2ஆவது விக்கெட்டில் 31 ஓட்டங்களைப் பகிர்ந்தனர்.

தொடர்ந்து குசல் மெண்டிஸ், குசல் பெரேரா ஆகிய இருவரும் திறமையாகத் துடுப்பெடுத்தாடி 3ஆவது விக்கெட்டில் 69 ஓட்டங்களைப் பகிர்ந்து தமது அணிக்கு வெற்றியை அண்மிக்க உதவினர். அவர்கள் இருவரும் 13 ஓட்டங்கள் வித்தியாசத்தில் ஆட்டம் இழந்தனர்.

குசல் மெண்டிஸ் 49 ஓட்டங்களையும் குசல் பெரேரா 39 பந்துகளில் 4 பவுண்டறிகள், 3 சிக்ஸ்களுடன் 53 ஓட்டங்களையும் பெற்றனர். (146 - 4 விக்.)

தனஞ்சய டி சில்வா (2 ஆ.இ.), அலெக்ஸ் ரொஸ் (1 ஆ.இ.) ஆகிய இருவரும் வெற்றிக்கு மேலும் தேவைப்பட்ட ஒரு ஓட்டத்தைப் பெற்றுக்கொடுத்தனர்.

பந்துவீச்சில் ஷக்கிப் அல் ஹசன், சீக்குகே பிரசன்ன, தப்ரெய்ஸ் ஷம்சி ஆகியோர் தலா ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.

முன்னதாக துடுப்பெடுத்தாடிய காலி அணி லசித் குரூஸ்புள்ளேயின் அரைச் சதத்தின் உதவியுடன் 20 ஓவர்களில் சகல விக்கெட்களையும் இழந்து 146 ஓட்டங்களைப் பெற்றது.

ஒரு பக்கத்தில் சீரான இடைவெளியில் விக்கெட்கள் சரிந்துகொண்டிருக்க மறுபக்கத்தில் தனி ஒருவராக திறமையை வெளிப்படுத்திய ஆரம்ப வீரர் குரூஸ்புள்ளே, தனது அணி கௌரவமான நிலையை அடைய உதவினார்.

பானுக ராஜபக்ஷ (0), லிட்டன் தாஸ் (8) ஆகிய இருவரும் ஆட்டம் இழக்க அந்த அணி தடுமாறியது. எனினும் குரூஸ்புள்ளேயும் சகீப் அல் ஹசனும் 3ஆவது விக்கெட்டில் 51 ஓட்டங்களைப் பகிர்ந்து அணியை ஓரளவு நல்ல நிலையில் இட்டனர்.

சகீப் அல் ஹசன் 19 ஓட்டங்களுடன் ஆட்டம் இழந்ததைத் தொடர்ந்து அணித் தலைவர் தசுன் ஷானக (12) நஜிபுல்லா ஸத்ரான் (2) ஆகிய இருவரும் 2 ஓட்டங்கள் வித்தியாசத்தில் ஆட்டம் இழந்தனர்.

குரூஸ்புள்ளே 61 பந்துகளை எதிர்கொண்டு 7 பௌண்ட்ரிகளுடன் 80 ஓட்டங்களைப் பெற்று கடைசி ஓவரில் ஒரு பந்துமீதமிருந்தபோது ஆட்டம் இழந்தார்.

இதனிடையே 15 ஓட்டங்களைப் பெற்ற லஹிரு சமரக்கோனுடன் 6ஆவது விக்கெட்டில் 29 ஓட்டங்களைப் பகிர்ந்தார்.

சீக்குகே பிரசன்ன 8 ஓட்டங்களுடன் ஆட்டம் இழக்க, கடைநிலை வீரர்கள் மூவரும் ஓட்டம் பெறவில்லை.

பந்துவீச்சில் ஹேடன் கேர் 18 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்களையும் நூர் அஹ்மத் 27 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்களையும் கைப்பற்றினர். (ஐ)


# மகளிர் உலகக் கிண்ணம் இறுதியில் இங்கிலாந்து!

சிட்னி, ஒக. 19

மகளிர் உலகக் கிண்ண உதைபந்தாட்ட போட்டியின் 2ஆவது அரையிறுதி போட்டியில் இங்கிலாந்து 3-1 கோல் கணக்கில் அவுஸ்திரேலியாவை வீழ்த்தி, 2ஆவது அணியாக இறுதிப் போட்டியில் இடம் பிடித்தது.

உலகக் கிண்ண வரலாற்றில் அந்த அணி இறுதி ஆட்டத்துக்கு வந்தது இதுவே முதல் முறையாகும். அதில் ஸ்பெயினுடன் வரும் நாளை பலப் பரீட்சை நடத்துகிறது இங்கிலாந்து.

மறுபுறம், போட்டியை நடத்தும் நாடுகளில் ஒன்றான அவுஸ்திரேலியா, கோப்பைக்கான பந்தயத்திலிருந்து வெளியேறி, 3ஆவது இடத்துக்காக சுவீடனுடன் இன்று சனிக்கிழமை மோதுகிறது. (ஐ)



# இந்தியாவுக்கும் சீனாவுக்கும் நாட்டை விற்பதற்கு முயற்சி!

## ஐக்கிய மக்கள் சக்தி குற்றச்சாட்டு



**கொழும்பு, ஓக. 19**

**இலங்கையிலுள்ள குழந்தைகள் இந்திய சீன மொழிகளைக் கற்க வேண்டும் என்று ஜனாதிபதி கூறிய கதையை கேட்கும் போது இந்தியாவுக்கும் சீனாவுக்கும் நாட்டை விற்கப் பார்க்கிறார்களா என்று கேட்கத் தோன்றுகிறது என பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.மரிக்கார் தெரிவித்தார்.**

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில்நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

முன்பெல்லாம் வெள்வேறு முதலீட்டாளர்கள் எங்களிடம் வந்து மூதலீடு குறித்து பேசி செயற்படுவர். ஆனால் இப்போது அப்படி இல்லை.

இந்தியாவுக்குச் சென்று விற்றுவிட்டதை நாம் அறியோம். இன்னும் என்ன சொல்வதென்று தெரியவில்லை. நிதி குறித்த முழு அதிகாரம் கொண்ட பாராளுமன்றத்துக்கும் தெரியவில்லை.

அதானியிடம் என்ன பேசினார்கள் என்றும் இந்தியா சென்ற போது என்ன செய்தார்கள் என்றும் தெரியவில்லை. அதானிக்கு என்ன விற்றார்கள் என்றும் தெரியவில்லை. இவற்றுக்கு மத்தியில் சீன ஆராய்ச்சி கப்பல் விவகாரத்தால் இந்தியா மீண்டும் குழப்பமடைந்துள்ளது.

இன்னொரு பக்கம் மக்கள் நாட்டை விட்டு வெளியேறுகிறார்கள். இன்னொரு பக்கம் இலங்கைப் பிள்ளைகள் சீன ஹிந்தி கற்கவேண்டும் என்கிறார்கள்.

எல்லாவற்றுக்கும் முதல் பாடசாலை கல்வியை கற்பதற்குரிய ஏற்பாடுகளை முறையாக வழங்க வேண்டும்.

பொருட்களின் விலை, மின்சாரக் கட்டணம், நீர்க் கட்டணம் அதிகரித்திருப்பதாலும் தரம் குறைந்த மருந்தாலும், மருந்தின் விலை மிக அதிகமாக உயர்ந்ததாலும் மருத்துவமனைகளுக்குச் சென்று சாக வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாலும் குழந்தைகளை பள்ளிக்கு அனுப்ப முடியாமல் பெற்றோர்கள் தவிக்கின்றனர்.

இவ்வாறு இருக்கும் போது இன்று நாட்டின் பிள்ளைகள் சீன ஹிந்தி மொழிகளை கற்கச் சொல்கிறார்கள்.

எதிர்வரும் பொதுத் தேர்தலில் எமது அரசாங்கம் அமைக்கப்பட்டு சஜித் பிரேமதாச பிரதமரான பின்னர், ஜனாதிபதி தேர்தலை திட்டமிட்டபடி விரைவில் நடத்த ஏற்பாடு செய்வோம்.

பலம் வாய்ந்த அரசியல் கட்சியினால் ஜனாதிபதி வேட்புமனுவை பெற்றுக்கொள்ள தற்போதைய ஜனாதிபதியினால் முடியாது-என்றார். (அ)

# வாகன அடிச்சட்ட இலக்கங்களை யாழில் மீள பொறிக்க நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஓக. 19

யாழ்.மாவட்ட மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்களத்தினால், சேதமடைந்த அல்லது தெளிவற்ற வாகன அடிச்சட்ட இலக்கங்களை மீள பொறிக்கும் நடவடிக்கை எதிர்வரும் 25ஆம், 26ஆம் திகதிகளில் முன்னெடுக்கப்படவுள்ளது.

இந்நிலையில் தேவைப்பாடு உடையோர், தமது மோட்டார் வாகனப் பதவுச் சான்றிதழ் மற்றும் அடையாள அட்டை என்பவற்றுடன் மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தில் முற்பதிவுகளை மேற்கொண்டு, குறித்த திகதிகளில் வாகன அடிச்சட்ட இலக்கங்களை மீளப் பொறித்துக்கொள்ள முடியும் என யாழ்.மாவட்ட செயலாளர் அறிவித்துள்ளார். (அ)

# மின்சாரத்தைக் கொள்வனவு செய்வதற்கு பொதுப்பயன்பாடு ஆணைக்குழு அனுமதி!

கொழும்பு, ஓக. 19

100 மெகாவாட் மின்சாரத்தைக் கொள்வனவு செய்ய பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழு அனுமதி வழங்கியுள்ளது.

100 மெகாவாட் மின்சாரத்தை 6 மாத காலத்துக்கு கொள்வனவு செய்ய இலங்கை மின்சார சபைக்கு இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு அனுமதி வழங்கியுள்ளது.

2009 ஆம் ஆண்டு 20 ஆம் இலக்க இலங்கை மின்சாரச் சட்டத்தின் 43 ஆவது பிரிவின் கீழ் இந்த அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

அத்தோடு, 3 முக்கிய நிபந்தனைகளின் கீழ் 2023 ஒகஸ்ட் மாதம் 18 ஆம் திகதி முதல் 6 மாத காலத்திற்கு மின்சாரத்தை கொள்வனவு செய்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அந்தவகையில், குறித்த மின்சார கொள்முதல் சிறப்புத் தகுதியின் அடிப்படையில் செய்யப்படவேண்டும் மற்றும் மின்சாரக் கொள்முதல் ஒப்பந்த காலத்தின் முடிவில் கொள்முதல் பற்றிய சுயாதீன தணிக்கை செய்யப்பட வேண்டும் என்று முதல் நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளது. (அ)

# உள்நாட்டு இறைவரி சட்டத்தில் திருத்தம்!

கொழும்பு, ஓக. 19

உள்நாட்டு இறைவரி சட்டத்தை அவசரமாகத் திருத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தேசிய பொருளாதாரம் மற்றும் பௌதீகத் திட்டங்கள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவின் தலைவர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

சர்வதேச நாணய நிதியத்தின் பரிந்துரைகளுக்கமைய பணவீக்கத்தை ஒற்றை இலக்கத்துக்கு கொண்டு வருதல், வெளிநாட்டுக் கையிருப்பை அதிகரித்தல் மற்றும் அரச வரி வருமானத்தை அதிகரித்தல் ஆகிய விடயங்களில், அரசாங்கம் எதிர்பார்க்கும் இலக்குகளுக்கு செல்ல முடியுமா என்பது தொடர்பாக ஆராய்ந்து வருகிறோம்

அரச வரி வருமானத்தை அதிகரிப்பதைத் தவிர ஏனைய இலக்குகளில் நாம் ஓரளவு திருப்திகரமான நிலைக்கு வந்துள்ளோம்.

2023 ஆம் ஆண்டில் அரசாங்கம் எதிர்பார்த்துள்ள அரச வரி வருமானம், 3,105 பில்லியன்களாகும்.

ஆனால் இதுவரை, 1,179 பில்லியன்களே கிடைத்துள்ளன. அது அறவிடப்பட வேண்டிய வரியில் 38 வீதமாகும்.

இந்த ஆண்டு டிசெம்பர் மாதத்துக்குள் உரிய இலக்குகளை எட்டவேண்டும் என சர்வதேச நாணய நிதியம் அரசாங்கத்துக்கு அறிவித்துள்ளது.

நீதி அமைச்சின் உதவியுடன் உள்நாட்டு இறைவரிச் சட்டத்தில் மேற்கொள்ளவேண்டிய மறுசீரமைப்புகள் தொடர்பான வரைவு தற்போது தயாரிக்கப்பட்டு வருகிறது.

வரி செலுத்தவேண்டியவர்கள் பல்வேறு மேன்முறையீடுகளை முன்வைத்து தமது வருமானத்தை சரியாக கணக்காய்வுக்கு உட்படுத்தாமல் வரி செலுத்துவதை தவிர்த்து வருகின்றனர்.

உள்நாட்டு இறைவரித் திணைக்களத்துக்கு கிடைக்க வேண்டிய வரி வருமானம், முழுமையாக கிடைக்குமாயின் வெளிநாடுகளிடம் கடன் பெறவேண்டிய நிலை நாட்டுக்கு ஏற்படாது.

உள்நாட்டு இறைவரித் திணைக்களம் 08 பில்லியன் ரூபா செலவில் கணனித் தரவுக் கட்டமைப்பு ஒன்றை தயாரித்துள்ளது.

ஆனால், 10 ஆண்டுகளாகியும் இந்தக் கட்டமைப்பை செயல்படுத்த அதிகாரிகள் எந்த முயற்சியும் எடுக்கவில்லை.

அதனால்தான் டிஜிற்றல் மயமாக்கலின் ஊடாக அரச பொறிமுறையில் உள்ள அனைத்து நிறுவனங்களையும் ஒன்றிணைத்து இவ்வாறு நிகழும் முறைகேடுகளைத் தடுப்பதற்கான பணிகளை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்னெடுத்து வருகின்றார்-என்றார். (அ)

# கடுமையான வறட்சியால் பால் உற்பத்தி பாதிப்பு

கொழும்பு, ஓக. 19

நிலவும் வறட்சியான காலநிலையினால் உள்நாட்டு பால் உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளது.

இந்தநிலையில், இது தொடர்பான அறிக்கை ஒன்றை சமர்ப்பிக்குமாறு கால்நடைப் பிரிவுக்கு விவசாய அமைச்சர் பணிப்புரை விடுத்துள்ளார்.

வறட்சியான காலநிலையை கருத்திற் கொண்டு கால்நடை வளர்ப்பில் ஏற்பட்டுள்ள பாதிப்புகளை குறைத்துக் கொள்ள முன்னெடுக்கவேண்டிய திட்டங்கள் தொடர்பில் ஆராய்வதற்காக அமைச்சர் இந்த நடவடிக்கையை எடுத்துள்ளதாக விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

# கொட்டகலை பாடசாலையில் மாணவர் குழுக்கள் மோதல்!

கொழும்பு, ஓக. 19

நுவரெலியா பிராந்திய கல்வி அலுவலகத்திற்குட்பட்ட ஹற்றன், கொட்டகலை பிரதேசத்தில் உள்ள பாடசாலை ஒன்றில் இரண்டு மாணவர் குழுக்களுக்கிடையில் மோதல் ஏற்பட்டுள்ளது.

குறித்த பாடசாலையின் தரம் 08, 09 மற்றும் 10 ஆம் வகுப்பு மாணவர்களே இந்த மோதலில் ஈடுபட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன் தினம் பாடசாலைக்கு விடுமுறை வழங்கப்பட்டஹ நிலையில் பாடசாலை மைதானத்தில் இந்த மோதல் இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (அ)

# பியர் குடித்துவிட்டு பாடசாலைக்கு வந்த 14 வயது மாணவி சிக்கினார்!

கொழும்பு, ஓக. 19

பியர் அருந்திவிட்டு பாடசாலைக்கு வந்த 14 வயதுடைய பாடசாலை மாணவி ஒருவர் அனுராதபுரம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக கெக்கிராவ பொலிஸார் தெரிவித்தனர்.

அண்மையில், கெக்கிராவ கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலை ஒன்றிற்கு முன்பாக உள்ள பிரதான வீதியில் போக்குவரத்து கடமையில் ஈடுபட்டிருந்த கெக்கிராவ பொலிஸ் உத்தியோகத்தர்கள் இருவர், பியர் அருந்திவிட்டு பாடசாலைக்கு வந்த இம்மாணவியை அடையாளம் கண்டு பொலிஸ் நிலையம் அழைத்துச் சென்றுள்ளனர்.

மாணவி தள்ளாடியபடி வந்ததை அவதானித்த பொலிஸார், அவருக்கு சுகவீனம் என நினைத்து உதவ முற்பட்டபோது, அவர் மதுபோதையில் இருப்பது தெரிய வந்தது.

பின்னர், குறித்த மாணவி கெக்கிராவ பொலிஸ் நிலையத்திற்கு கொண்டு செல்லப்பட்டு, அநுராதபுரம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

இந்த மாணவி எவ்வாறு மதுபானம் அருந்தினார் என்பதை அறியும் முதற்கட்ட விசாரணையில், சிறுமியின் தாயின் இரண்டாவது கணவர், பியர் குடிக்கக் கற்றுக் கொடுத்திருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகிறது.

கெக்கிராவ பொலிஸார் இது தொடர்பில் கெக்கிராவ நீதவான் நீதிமன்றத்தின் நன்னடத்தை அலுவலகத்திற்கு அறிவித்ததுடன், சிரேஷ்ட நன்னடத்தை அதிகாரி கருணா கீர்த்திரத்ன தனியான விசாரணைகளை மேற்கொண்டுள்ளார்.

மேற்படி விசாரணையின் படி, குறித்த மாணவி கல்வி கற்கும் பாடசாலையின் அதிபரிடம் வாக்குமூலம் பெறுவதற்கு சிரேஷ்ட நன்னடத்தை அதிகாரி அழைப்பு விடுத்தபோது, அதிபர் தொலைபேசியை துண்டித்து விசாரணைகளுக்கு ஒத்துழைக்க மறுத்துவிட்டார்.

பின்னர், பாடசாலையின் அதிபர் விசாரணைக்கு இடையூறு விளைவிப்பதாக, சிரேஷ்ட நன்னடத்தை அதிகாரி கருணா கீர்த்திரத்ன, கெக்கிராவ பிராந்திய கல்விப் பணிப்பாளரிடம் முறைப்பாடு செய்தார்.

குறித்த சிறுமி பியர் குடித்துவிட்டு பாடசாலைக்கு வந்ததற்கான காரணம் மற்றும் அவருக்கு பியர் குடிக்கக் கற்றுக் கொடுத்தவர் யார் என்பது தொடர்பில் விரிவான விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக கெக்கிராவ பொலிஸார் தெரிவித்தனர்.

சிறுமி கல்வி கற்கும் பாடசாலையில் உள்ள பல ஆசிரியர்களிடம் ஏற்கனவே வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (அ)

# வீதி அபிவிருத்தி சபை தனியார் மயமாகாது!

## அமைச்சர் பந்துல உறுதி

கொழும்பு, ஓக. 19

வீதி அபிவிருத்தி அதிகார சபையை தனியார் மயப்படுத்த போவதில்லை. நட்டமடையும் அரச நிறுவனங்களை மறுசீரமைப்பதால் அரச சேவையாளர்களின் தொழில் உரிமைகளுக்கு பாதிப்பு ஏற்படாது. மனித வள முகாமைத்துவம் குறித்து விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது என நெடுஞ்சாலைகள் அபிவிருத்தி, போக்குவரத்து மற்றும் ஊடகத்துறை அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

வீதி அபிவிருத்தி அதிகார சபை சங்கத்தின் பிரதிநிதிகளுக்கும் அமைச்சருக்கும் இடையிலான சந்திப்பு நேற்று வெள்ளிக்கிழமை நெடுஞ்சாலைகள் அபிவிருத்தி அமைச்சின் பணிமனையில் நடைபெற்றது.

வீதி அபிவிருத்தி அதிகார சபையை மறுசீரமைப்பதாக குறிப்பிட்டுக் கொண்டு தனியார் மயப்படுத்தும் முயற்சிகள் முன்னெடுப்பாக தொழிற்சங்கத்தினர் அமைச்சரிடம் குறிப்பிட்டனர்.

அமைச்சரவையின் அனுமதியுடன் வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டு வீதி அபிவிருத்தி அதிகார சபை நிதியமைச்சின் கீழ் உள்ள நிறுவனத்துக்கு பொறுப்பாக்கப்பட்டுள்ளது.

அரச சொத்து மதிப்பீட்டை அதிகரித்துக் கொள்வதற்காகவே இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. ஆகவே இதனை தனியார் மயப்படுத்தல் என்று குறிப்பிட முடியாது என அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

நட்டமடையும் அரச நிறுவனங்களை மறுசீரமைக்காமல் பொருளாதார பாதிப்புக்கு நிலையான தீர்வு காண முடியாது. ஆகவே, நட்டமடையும் அரச நிறுவனங்களை மறுசீரமைக்க கொள்கை ரீதியில் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

ஒருசில நிறுவனங்களின் கட்டமைப்பில் மாற்றம் ஏற்படுத்தாமல் மக்களுக்கு வினைத்திறனான சேவையை வழங்க முடியாத தன்மை காணப்படுகிறது. அரச நிறுவனங்களை மறுசீரமைப்பதால் அரச சேவையாளர்களின் தொழில் உரிமைகளுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாது.

மறுசீரமைப்புக்களின் போது மனித வள முகாமைத்துவத்தை பாதுகாக்க சர்வதேச நிறுவனங்களின் ஒத்துழைப்பு பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. என்றார் (ஐ)

### 5ஆயிரம்...

40 ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஆசிரியர்களுக்கு பற்றாக்குறை நிலவுகிறது என்றுஅவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

அரச ஊழியர்கள் 5 வருட காலம் விடுமுறை பெற்று உள் நாட்டிலோ அல்லது வெளி நாட்டிலோ வேலைக்குச் செல்ல லாம் என அரசாங்கம் தீர்மானம் எடுத்திருந்ததாகவும் இதனைப் பயன்படுத்தி ஆசிரியர்கள் வெளிநாடுகளுக்குச் சென்றுள்ளனர் என்றும் அவர் தெரிவித்தார்.

மூளையில்லா அரசாங்கத்தாலேயே இந்நிலை ஏற்பட்டுள்ளதாகவும் ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்புவதற்கு மாகாண சபைகளுக்கு அதிகாரம் வழங்குவதன் மூலம் அனுபவம் வாய்ந்த ஆசிரியர்கள் கிடைப்பது பிரச்னை - என்றும் அவர் கூறினார். (ஐ)

### பெண் உடையில்...

நடத்தியுள்ளனர். இதில், யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் மீதான தாக்குதலும் அடங்கும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

கைதானவர்கள் அனைவரும் இருபாலை, மானிப்பாய், மல்லாகம் பகுதிகளை சேர்ந்தவர்கள் என்றும் 23- 28 வயதுக்கு இடைப்பட்டவர்கள் எனவும் தெரியவருகின்றது.

சந்தேகநபர்களிடமிருந்து 3 மோட்டார் சைக்கிள்கள், 2 வாள்கள், கைக்கோடரி மற்றும் கல்வியங்காடு தாக்குதலின்போது பயன்படுத்தப்பட்ட பெண்களின் உடை என்பன கைப்பற்றப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இதேசமயம், புலம்பெயர் நாடு ஒன்றில் வசிக்கும் ஒருவேர பணம் அனுப்பியே கல்வியங்காடு தாக்குதலை நடத்தியதாக சந்தேகநபர்கள் வாக்குமூலம் அளித்துள்ளனர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

### மாகாண...

செயலாளர்களுடன் ஜனாதிபதி நேற்று முன்தினம் நடத்திய ஆலோசனை கூட்டத்திலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அத்துடன், உள்ளூராட்சி சபை, மாகாண சபை மற்றும் மத்திய அரசாங்கம் ஆகிய மூன்று பிரிவுகளிலும் சேவைகள் வழங்குவதில் ஏற்படும் பண விரயத்தைத் தவிர்க்க மூன்றும் இணைந்த பொறிமுறை ஒன்றை அறிமுகப்படுத்தவும் ஜனாதிபதி தீர்மானித்துள்ளார். இது தொடர்பில், ஆளுநர்கள், பிரதம செயலர்கள், ஜனாதிபதி செயலக அதிகாரிகளுடன் கலந்துரையாடி அத்தகைய பொறிமுறையை உருவாக்கவும் உத்தரவிட்டுள்ளார்.

மேலும், மாகாண சபைகள் இயங்காததாலும், மாகாண சபைகளில் அமைச்சர்கள் இல்லாததாலும் இன்று மாகாண சபை முறைமையில் மாகாண ஆளுநர்கள் உங்களுக்கே முழுமையான ஆட்சி அதிகாரம் உள்ளது. மாகாண பிரதம செயலாளர்களுடன் கலந்தாலோசித்து, ஒரு மாதத்துக்குள் அதற்கான புதிய கட்டமைப்பைத் தயாரிக்குமாறு நான் ஆலோசனை வழங்கியுள்ளேன்.

பாராளுமன்றம் அடுத்த வருட இறுதி வரை செயல்படும் என்பதால் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் மாகாண சபை நிர்வாக செயற்பாடுகளில் இணைவதற்கு வாய்ப்பு வழங்கப்பட வேண்டும். ஆளுநருடன் இணைந்து செயல்பட விசேட ஆலோசனைக் குழுவை நியமிக்கவும் எதிர்பார்க்கப் படுகிறது.

இதேவேளை, அரசமைப்பின் 13ஆவது திருத்தம் தொடர்பான மாகாண சபை அதிகாரங்கள் தொடர்பிலும் ஆராயப்பட்டு வருகின்றது. குறிப்பாக, கல்வி, தொழில்பயிற்சி மற்றும் அந்தந்த மாகாணங்களில் புதிய பல்கலைக்கழகங்களை நிறுவுதல் ஆகிய பணிகளிலும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது - என்றும் ஜனாதிபதி இதன்போது தெரிவித்தார். (ஐ)

### குருந்தூர்...

குவிக்கப்பட்ட பொலிஸார் மற்றும், விசேட அதிரடிப்படையினருக்கு மத்தியிலும் குருந்தூர்மலையில் அத்துமீறி விகாரை அமைத்திருக்கின்ற பிக்குவின் அடாவடிகளுக்கு மத்தியிலும் இந்த பொங்கல் நிகழ்வு மக்களுடைய கூட்டு முயற்சியாலும், அனைவருடைய ஒத்துழைப்புடனும் மிகச் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பல்வேறுபட்ட தடைகள் இருந்தும் அந்தத் தடைகளைத் தாண்டி நீதியின் பக்கம் நின்ற முல்லைத்தீவு மாவட்ட நீதித்துறையின் நியாயமான பக்கங்கள் எண்ணத்திலெடுக்கப்பட்டு, அந்த எண்ணத்தின் அடிப்படையில் நேர்மையாகவும் நேர்த்தியாகவும் நடைபெற்ற இந்த பொங்கலுக்காக நாம் அனைவருக்கும் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளோம்.

தமிழர்கள் ஆதிகாலம் தொட்டு அவர்கள் வணங்கிவந்த, வாழ்ந்துவந்த அவர்களது வரலாற்று அடையாளமான குருந்தூர் மலையிலே, தமிழர்களுடைய இருப்பை இல்லாமல்செய்து குருந்தூர்மலையை பௌத்த தொல்லியல் இடமாக ஆக்கிரமித்து விகாரை அமைக்கும் முயற்சிகைளை மேற்கொண்டு அந்தவிகாரை எந்தவித அனுமதியுமின்றி தொல்பொருள் திணைக்களத்தினுடைய முழுமையான ஆதரவுடனும், அரச ஆதரவுடனும் கட்டப்பட்டிருக்கின்றது.

இதேவேளை ஆதிசிவன் ஐயனார் இருந்த இடங்கள் அழிக்கப்பட்டு, இந்த இடத்தில்தான் நீங்கள் பொங்க வேண்டும் என்று வலியுறுத்தப்படுகின்றது. அதிலும் நிபந்தனைகள் விதிக்கப்படுகின்றன. குறிப்பாக நிலத்திலே கற்கள் வைத்து கற்களுக்குமேல் தகரம் வைத்து தகரத்தின்மேல் கற்கள் வைத்தே பொங்கல் செய்யவேண்டும் என்ற அதிசயமான சட்டங்களை இந்த மண்ணில், இந்த ஆலயத்தில் என்னால் காணமுடிந்தது.

தொல்லியல் என்பது அடையாளமாக வைத்துப் பார்க்கவேண்டிய இடமே தவிர, அந்த இடம் விகாரை கட்டப்படவேண்டிய இடமல்ல. இங்கே சிங்கள மக்களுக்கு ஒரு சட்டம், தமிழர் கள் வாழ்கின்ற பூர்வீக நிலங்களுக்கொரு சட்டமாக ஆக்கிரமிப்பாளர்களது நிலையை நாம் இந்த இடத்தில் காண்கிறோம்.

இது தமிழர்களுடைய இருப்பையும், அவர்களுடைய எதிர்கால வாழ்வையும் மிகப்பெரிய கேள்விக்கு உட்படுத்தியிருக்கின்றது. ஆனாலும் நாம் கட்சி வேறுபாடுகளுக்கு அப்பால், எங்களுக்குள் இருக்கிற வேற்றுமைகளுக்கு அப்பால் ஒற்றுமையாக அனைத்துத் தமிழர்களும் இணைந்து எம்பெருமான் சிவனுக்குரிய அரோகரா என்ற நாமத்துடன் இந்த பொங்கல் விழாவைச் செய்திருக்கின்றோம். இந்தப் பொங்கல் விழா தொடர்ந்து மாதாந்தம் இடம்பெறும்.

எங்களுடைய மக்களின் இருப்பும் அவர்களுடைய தொன்ம அடையாளங்களும் பேணப்படும் வகையில் எங்களுடைய செயற்பாடுகளும் தொடர்ந்து முன்னெடுக்கப்படும். இந்த இடத்திலே, பாரம்பரியமான வரலாற்று புகழ்மிக்க சிவாலயம் கட்டுவதற்கான ஏற்பாடுகளையும் நாங்கள் அனைவரும் இணைந்து முன்னெடுப்போம் - என்றார். (ஐ)

### தடைகளைத்...

பொங்கல் பொங்கினர்.

ஓர் இடத்தில் மட்டுமே அடுப்பு மூட்ட அனுமதி வழங்கப்பட்டதால் பக்தர்கள் பொங்குவதற்கு அனுமதி அளிக்கப்படவில்லை.

இதேநேரம், பொங்கல் இடம்பெற்றுக்கொண்டிருந்தவேளை அவ்விடத்தில் பிக்குகளால் குழப்ப நிலை ஒன்றும் ஏற்பட்டது. எனினும், அதனை பொலிஸார் கட்டுக்குள் கொண்டு வந்தனர்.

ஆதிசிவன் ஆலய நிர்வாகத்தினர் பொங்கல் பொங்கி படைத்து, பூசை வழிபாடுகளை மேற்கொண்டு பிரசாதங்களை பரிமாறினார்கள்.

இந்த நிகழ்வில், பாராளுமன்ற உறுப்பினர்களான சிவஞானம் சிறீதரன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செல்வராசா கஜேந்திரன் மற்றும் முன்னாள் மாகாண சபை உறுப்பினர்களான கந்தையா சிவநேசன், துரைராசா ரவிகரன் மற்றும் பிரதேச சபை உறுப்பினர்கள் உள்ளிட்ட அரசியல் பிரமுகர்கள், சிவில் சமூக செயற்பாட்டாளர்கள், பொதுமக்கள் என சுமார் 500 பேர் கலந்துகொண்டனர்.

இதேவேளை, பௌத்த விகாரையில் இடம்பெற்ற வழிபாடுகளில் வவுனியா சப்புமல்கஸ்கட ரஜமகா விகாரை விகாராதிபதி கல்கமுவ சாந்தபோதி தேரர் தலைமையில் 29 தேரர்கள் மற்றும் சுமார் 300 பேர் வரையிலான பொதுமக்கள் கலந்துகொண்டனர்.

இதேவேளை, வழிபாட்டுக்காக குமுழமுனை, தண்ணிமுறிப்பு வீதியால் சென்ற மக்கள் பொலிஸார் கடுமையான சோதனைகளையும் முன்னெத்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

### 13ஆம் திருத்தத்தை...

நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அரசமைப்பின் 13ஆம் திருத்தம் தொடர்பாக அனைத்து கட்சிகளும் கலந்துரையாடி அதனை செயல்படுத்த வேண்டும் என்ற நோக்கிலேயே 13 தொடர்பான தனது பிரேரணையை ஜனாதிபதி கடந்த வாரம் பாராளுமன்றத்துக்கு முன்வைத்திருந்தார்.

பாராளுமன்றத்தினால் மாத்திரமே இதற்கு தீர்வு காண முடியும். ஆனால் எதிர்க்கட்சிகள் இதனை சந்தர்ப்பமாக பயன்படுத்திக்கொண்டு 13ஆம் திருத்தத்தை வைத்துக்கொண்டு கால்பந்தாடி வருகின்றன.

13ஆம் திருத்தம் தொடர்பாக எதிர்க்கட்சிகளிடம் உறுதியான நிலைப்பாடு இல்லை. ஒரு தரப்பு ஆதரவளிக்கும்போது மற்ற தரப்பு அதற்கு எதிர்ப்பு தெரிவிக்கிறது. எதிர்க்கட்சிகளின் இந்த நிலைப்பாடு 13ஆம் திருத்தத்தில் மாத்திரமல்ல, அரசாங்கம் பாராளுமன்றத்துக்கு கொண்டுவந்திருக்கும் அனைத்து பிரேரணைகளிலும் அவ்வாறே இருக்கின்றது.

சர்வதேச நாணய நிதியத்துடன் செய்துகொண்டுள்ள ஒப்பந்தம் விடயத்திலும் எதிர்க்கட்சிகள் ஒரு நிலைப்பாட்டில் இல்லை. இவ்வாறான எதிர்க்கட்சி எதிர்காலத்தில் ஆட்சிக்கு வந்தால் நாட்டுக்கு என்ன நடக்கும் என தெரியாது.

மேலும், 13ஆம் திருத்தத்தை பெரிய விடயமாக மக்கள் மத்தியில் பிரசாரம் செய்து, நாட்டில் மீண்டும் இனங்களுக்கு இடையில் மோதலொன்றை ஏற்படுத்தவே எதிர்க்கட்சி முயற்சிக்கிறது. நாடுதொடர்பில் உணர்வு இருக்கும் உண்மையான எதிர்க்கட்சி என்றால், 13தொடர்பாக ஜனாதிபதி பாராளுமன்றத்துக்கு முன்வைத்திருக்கும் பிரேரணை சம்பந்தமாக பாராளுமன்றத்தில் விவாதித்து, மக்களுக்கு தீர்வொன்றை பெற்றுக்கொடுக்க முன்வரவேண்டும்.

அரசாங்கம் வடக்கில் கைப்பற்றிய காணிகளில் ஒரு பகுதியை அந்த மக்களுக்கு மீண்டும் கையளிக்க முற்படும்போது சிலர் எதிர்ப்பு தெரிவிக்கின்றனர். ஆனால் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அவரது காலத்தில் சுமார் 12ஆயிரம் ஏக்கர் காணிகளை விடுவித்தார். ஆனால், தற்போது நாங்கள் 300 ஏக்கர் காணி விடுவிக்கும் போது, மகிந்த ராஜபக்ஷவின் காலத்தில் எதிர்ப்பு தெரிவிக்காமல் இருந்த தேரர்கள்கூட இதற்கு எதிர்ப்பு தெரிவிக்கின்றனர்.

யுத்தம் இடம்பெற்ற காலத்தில் இராணுவத்தினர் வடக்கில் கட்டிடங்கள் காணிகளை கைப்பற்றி இருந்தனர். யுத்தம் முடிவடைந்த பின்னர் அந்த கட்டிடங்கள் காணிகளை மீள கையளிக்க நடவடிக்கை எடுத்தனர். அதுவே தற்போதும் இடம்பெறுகிறது. எனவே, யுத்தம் முடிவடைந்தும் வடக்கு, கிழக்கு மக்களுக்கு அவர்களின் உரிமைகளை அனுபவிக்க இன்னும் முடியாமல் போயிருக்கிறது. அவர்கள் தமிழர்கள் என்பதால் அவர்களை நசுக்கவேண்டுமா என நாங்கள் சமூகத்தில் கேட்கவேண்டும் - என்றார்.

### மூவாயிரம்...

இணைக்கப்படுவர். இதன்மூலம், விசேட மருத்துவ நிபுணர்களுக்கு நிலவும் பற்றாக்குறை ஓரளவு நிவர்த்தி செய்யப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

எவ்வாறாயினும், விசேட மருத்துவ நிபுணர்கள் நாட்டை விட்டு வெளியேறியமையால் ஏற்பட்டுள்ள நிலைமைக்கு விரைவான தீர்வுகளை வழங்குவது கடினமானது என்றும் சுகாதார அமைச்சு தெரிவித்தது. (ஐ)

ஈழநாடு
Eelanadu

# அதிகாரப் பகிர்வு விடயத்தில் பெரமுன இரட்டை நிலைப்பாடு

## நிமல் லான்சா குற்றச்சாட்டு

*கொழும்பு, ஓக. 19*

மாகாணங்களுக்கு அதிகாரங்களை பகிர்வது தொடர்பான விடயத்தில் பொதுஜன பெரமுன இரட்டை நிலைப்பாட்டை கையாண்டு வருவதாக பாராளுமன்ற உறுப்பினர் நிமல் லான்சா தெரிவித்துள்ளார்.

ஊடகங்களுக்கு வெளியிட்டுள்ள விசேட அறிக்கை ஒன்றில் அவர் இதனை கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அரசியலமைப்புச்சட்டத்தின் 13ஆவது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்தி நாட்டின் அனைத்து மக்களும் ஏற்றுக்கொள்ளக்கூடிய வேலைத்திட்டம் ஒன்றை உருவாக்க முயற்சிக்கும்போது அதனை எதிர்க்க பொதுஜன பெரமுனவுக்கு தார்மீக உரிமையில்லை.

13 ஆவது திருத்தச்சட்டத்திற்கு அப்பால் சென்ற தீர்வுக்கு கூட செல்லலாம் என்பது பொதுஜன பெரமுனவின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மகிந்தவின் நிலைப்பாடாகும்.

13ஆவது திருத்தச்சட்டம் ஏற்கனவே அரசியலமைப்புச் சட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

இதன் கீழ் நாட்டின் அனைத்து மக்களும் ஏற்றுக்கொள்ளக்கூடிய அதிகார பகிர்வை வழங்க தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சகல அரசியல் கட்சிகளின் யோசனைகளை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுத்துள்ளார்.

இவ்வாறான நிலைமையில் பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளர் அதற்கு எதிராக கருத்து வெளியிடுவது அவர்களின் இரட்டை நிலைப்பாட்டை காட்டுவதாக அமைந்துள்ளது.

நிலையான பொருளாதாரம் மற்றும் ஐக்கியத்தை கட்டியெழுப்ப நாட்டின் அனைத்து இனங்களுக்கும் இடையில் அமைதியையும் நல்லிணக்கத்தை உருவாக்க வேண்டும்.

இனங்களுக்கு இடையில் நம்பிக்கையை ஏற்படுத்தும் அனைவரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய அதிகாரப் பகிர்வை வழங்கவேண்டும்.

இதன் மூலம் சகல இன மக்களிடம் இருந்தும் நாட்டின் அபிவிருத்திக்கான பங்களிப்பை பெற்றுக் கொள்ள முடியும்.

அப்போது இனங்களுக்கு மத்தியில் தாம் இலங்கையர்கள் என்ற உணர்வு ஏற்படும்.

சகல இனங்களும் ஏற்றுக்கொள்ளக் கூடிய அதிகார பகிர்வின் மூலம் சர்வதேசத்தின் நம்பிக்கையையும் கட்டியெழுப்ப முடியும்.

இது குறித்த குறைந்தளவு புரிதல் கூட இல்லாமல், பொதுஜன பெரமுனவின் தலைவர் மகிந்தவின் நிலைப்பாடு மட்டுமின்றி, கட்சியில் அங்கம் வகிக்கும் மனசாட்சி படி செயற்படும் பெரும்பாலான பாராளுமன்ற உறுப்பினர்களின் நிலைப்பாடுகளுக்கு புறம்பான நிலைப்பாட்டை கட்சியின் பொதுச் செயலாளர் எந்த அடிப்படையில் முன்வைத்துள்ளார் என்பதை தெளிவுபடுத்தவேண்டும் - என்றார். (அ)

# அநுர-டிரான் இணைந்து பிரிட்டனின் வேர்ஜினியா தீவுகளில் முதலீடுகள்!

*கொழும்பு, ஓக. 19*

அநுரகுமார - டிரான் அலஸ் இணைந்து மோல்டாவில் கறுப்பு பணத்தை வெள்ளையாக மாற்றும் முதலீடுகளை செய்துள்ளதாக முன்னிலை சோசலிசக் கட்சியின் துமிந்த நாகமுவ வெளியிட்ட தகவல் சமூக ஊடகங்களில் பெரும் பரப்பரப்பை ஏற்படுத்தியுள்ளதாக ஜன அரகலய அமைப்பின் விதர்ஷன கன்னங்கர தெரிவித்துள்ளார்.

தான் அறிந்த வகையில் அந்த முதலீடுகள் மோல்டாவில் செய்யப்படவில்லை எனவும் பிரிட்டிஷ் வேர்ஜின் தீவுகளில் முதலீடு செய்யப்பட்டுள்ளன எனவும் அவர் கூறினார்.

ரிரான் அலஸ், தம்மிக்க பெரேரா போன்ற ஊழல் வர்த்தகர்களுடன் இருக்கும் தொடர்புகளை வெளிப்படுத்துமாறு நாங்கள் கூறும்போது, தம்மை போதுமான வரைக்கும் திட்டுவதாக அனுரகுமார கூறுகிறார்.

எதிர்காலத்தில் நாட்டை கட்டியெழுப்ப அதிகாரத்தை கோரும் முற்போக்காளர்கள் எனக் கூறிக்கொள்ளும் சக்திகளுக்கு ஊழல் வர்த்தக வலையமைப்புடன் இருக்கும் தொடர்புகள் வெளியாகும் எனவும் விதர்ஷன கன்னங்கர கூறியுள்ளார். (அ)

# சுகாதார அமைச்சருக்கு எதிராக நேற்று வவுனியாவில் கையெழுத்து போராட்டம்!

## ஐக்கிய மக்கள் சக்தியின் ஏற்பாட்டில்

**வவுனியா, ஓக. 19**

**அரச வைத்தியசாலைகளில் ஏற்பட்டுள்ள மருந்து தட்டுப்பாட்டிற்கு தீர்வைக் கோரி பொது மக்களிடம் கை எழுத்துப்பெறும் போராட்டம் ஒன்று வவுனியாவில் நேற்று முன்னெடுக்கப்பட்டது.**

ஐக்கிய மக்கள் சக்தியின் வவுனியா மாவட்ட கிளையினால் வவுனியா பொதுவைத்தியசாலைக்கு முன்பாக குறித்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது கருத்து தெரிவித்த ஏற்பாட்டாளர்கள்,

மருந்து தட்டுப்பாட்டினால் அதிகளவான பொதுமக்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர். அதிலும் கர்பிணித் தாய்மார்களின் நிலமை மிகவும் மோசமாகவுள்ளது. இந்த அரசாங்கத்திடம் நல்ல திட்டங்கள் இல்லை. மக்கள் வறுமைக்குள் தள்ளப்பட்டுள்ளனர்.




இந்த நிலமை தொடர்ந்தால் நாட்டுமக்கள் மரணிக்கும் அவலமே ஏற்ப்படும்.

எனவே மருந்து தட்டுப்பாட்டை நீக்குவதுடன், தற்போதைய சுகாதாரஅமைச்சரை மாற்றி மக்களுக்கு நன்மை செய்யக்கூடிய ஒருவர் அந்த பதவிக்கு நியமிக்கப்படவேண்டும் என்றனர்.

குறித்த போராட்டத்தில் ஐக்கியமக்கள் சக்தியின் வன்னி மாவட்ட முக்கியஸ்தர்களான ரசிக்கா பிரியதர்சினி, கருணாதாச உட்பட பலர் கலந்துகொண்டனர்.(அ)

# பெரியபுலம் மகாவித்தியாலயத்தின் 200ஆவது ஆண்டு நிறைவுப் பேரணி





*யாழ்ப்பாணம், ஓக. 19*

யாழ் பெரியபுலம் மகா வித்தியாலயத்தின் 200 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு மாபெரும் வாகன பேரணியொன்று நேற்று முன்னெடுக்கப்பட்டது.

இப்பாடசாலையின் 200ஆவது ஆண்டு விழா இன்றும் நாளையும் நடைபெற உள்ள நிலையில் இதன் முதற்கட்டமாக நேற்று வியாழக்கிழமை இப்பேரணி நடைபெற்றது.

பாடசாலையின் அதிபர் ந. பரமேஸ்வரன் கொடி அசைத்து பேரணியை பாடசாலை மூன்றலில் ஆரம்பித்து வைத்தார். அதனைத் தொடர்ந்து இப்பேரணி யாழின் பல இடங்களையும் சுற்றிவந்து நிறைவடைந்தமை குறிப்பிடத்தக்கது.

இதன்போது பாடசாலையில் 200 வது ஆண்டு குறிக்கும் சின்னத்துடன் பல்வேறு வாகனங்கள் பேரணியாக சென்றிருந்தன. (அ)

# 9 தமிழக மீனவர்கள் சென்னை திரும்பினர்

*கொழும்பு, ஓக. 19*

இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடித்த குற்றச்சாட்டில் கைதான 9 மீனவர்ள் நாடு திரும்பி யுள்ளனர்.

கடந்த ஜூலை 25ஆம் திகதியன்று நெடுந்தீவு கடற்பிராந்தியத்தில் அத்துமீறி மீன்பிடியில் ஈடுப்பட்ட 2 படகுகளுடன் 9 மீனவர்களை இலங்கைக் கடற்படையினர் கைது செய்தனர்.

கைதான மீனவர்கள் வழக்கு விசாரணைகளுக்கு பின்னர் சிறையில் அடைக்கப்பட்டனர்.

இந்திய மாநில மற்றும் மத்திய அரசின் நடவடிக்கையினால் கைதான மீனவர்கள் 9 பேரும் விடுதலை செய்யப்பட்டனர்.

இந்நிலையில், குறித்த மீனவர்கள் நேற்று காலை கொழும்பிலிருந்து விமானம் மூலம் சென்னை விமான நிலையத்தைச் சென்றடைந்தனர்.

அங்கு அவர்களை தமிழ்நாடு மீனவளத்துறை அதிகாரிகள் வரவேற்றதுடன், குறித்த மீனவர்களை பாதுகாப்பாக சொந்த ஊர்களுக்கு அனுப்பி வைத்திருப்பதாக தெரிவிக்கப்பட்டது. (அ)

# இலங்கை - பிரித்தானியா நட்பு குழுவின் புதிய செயலாளராக சுமந்திரன் தெரிவு!

*கொழும்பு, ஓக. 19*

கடந்த வாரம் இலங்கை-பிரித்தானியா நட்புக் குழுவானது புதிப்பிக்கப்பட்டுள்ளது.

இந்த இலங்கை பிரித்தானியா நட்புக் குழுவின் புதிய செயலாளராக தமிழரசுக் கட்சியின் பேச்சாளரும் பாராளுமன்ற உறுப்பினருமாகிய எம்.ஏ.சுமந்திரன் தெரிவு செய்யப்பட்டார்.

இக் கூட்டத்தில் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் உட்பட பலரும் கலந்து கொண்டனர். (அ)

# கோதுமை மா இறக்குமதிக்கு அனுமதி வழங்க ஆலோசனை



*கொழும்பு, ஓக. 19*

கோதுமை மாவை இறக்குமதி செய்வதில் இரட்டை நிலைப்பாடு நிலவுவதுடன், விரைவில் கோதுமை மா இறக்குமதிக்கான அனுமதியை வழங்குவது குறித்து நிதி அமைச்சு கலந்துரையாடி வருவதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்தார்.

உலக சந்தையில் கோதுமை மாவின் விலை, அரிசி விலை மற்றும் உணவுப் பாதுகாப்பு குறித்து நிதி அமைச்சு ஆய்வுகளை செய்து வருவதாகவும் அவர் கூறினார்.

இறக்குமதி அனுமதிப்பத்திரங்களை வழங்குவது தொடர்பில் நிதி அமைச்சு இன்னும் இறுதித் தீர்மானத்தை எட்டவில்லை. என்றாலும், தற்காலிக நடவடிக்கையாகவே இறக்குமதித் தடை விதிக்கப்பட்டுள்ளது.

கோதுமை மாவை இறக்குமதி செய்வதற்கான அனுமதியை கோரியும் இதுவரை அதற்கான உத்தரவுகள் வழங்கப்படாதுள்ளதால் எதிர்காலத்தில் கோதுமை மா தட்டுப்பாடு அல்லது விலை அதிகரிப்பு ஏற்படலாம் என கோதுமை மா இறக்குமதியாளர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

கோதுமை மா இறக்குமதிக்கு அரசாங்கம் விதித்த தடையைத் தொடர்ந்து இரண்டு பெரிய உள்ளூர் கோதுமை மா விநியோகஸ்தர்களும் பில்லியன் கணக்கான இலாபத்தை ஈட்டியுள்ளதாகவும் இறக்குமதியாளர்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

குறித்த இரண்டு பெரிய நிறுவனங்களும் கூடுதல் இலாபம் ஈட்டுவதைத் தவிர்க்கவும், நுகர்வோரைப் பாதுகாக்கவும் ஒரு கிலோகிராம் கோதுமை மாவின் விற்பனை விலையை ரூ.198 ஆக அறிவிக்குமாறு பொது நிதிக் குழு, சமீபத்தில் நிதி அமைச்சின் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியது.

இலங்கைக்கு கோதுமை மாவை இறக்குமதி செய்யும் இரண்டு நிறுவனங்களும் மாவின் விலையை குறைக்குமாறு கோரிக்கை விடுத்தபோதிலும் அதனை குறைக்க மறுத்துள்ளதாக வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோ பாராளுமன்றத்தில் தெரிவித்திருந்தார் என்பதும் சுட்டிக்காட்டத்தக்கது. (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 19.08.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.